தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளி நாடு: மூன்றணா. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 1	சென்னை 26—2—1955 சனிக்கிழமை	இதழ் 35

சலியாத உழைப்பாளி, தங்கத் தம்பி!

★ கொள்கை வீரர் ★

தாயகத்தின் செயல் வீரர் ஒருவரைத்தாங்கி வருகிறது இவ்வாரத் தென்றல். காங்கிரஸ் கோட்டையின் முன்னாள்காவலராக நின்று, பொது வாழ்வில் தன் சீரிய உழைப்பையெல்லாம் தந்து, கடைசியில் காங்கிரஸ் ஒரு சூதர் கூட்டம், சுகபோகிகளும், பார்ப்பனர்களும், சூழ்ந்துள்ள ஒரு சூழ்ச்சிமுகாம் என்பதை உணர்ந்தபின் திரு.வி.க. போன்ற நல்லோர் வெளியேறியதைப் போலவே, நம் என். வி.என் அவர்களும் வெளியேறி திராவிடர் இயக்கத்தின் அறிவுப் பணியால் கவரப்பட்டு, அன்றுமுதல் 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்; அப்பொழுதுதான் நமக்கெல்லாம் வாழ்வு!' என்று திக்கெட்டும் முழங்கி வரும் செயல் மன்னன் ! செந்தமிழ்க் காவலன்! இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணியில் நிற்பவர். இவர் வார்த்தை ஒவ்வொன்றும் ஆரியக் கோட்டைக்கு வைக்கப்படும் வெடி! குன்றாத மனவளம் பெற்ற மாவீரர். எளிய உடை, நடையோ அடலேறு ! அரசியல் மேடையிலோ புள்ளிவிவரங்களைஅள்ளித்தருவார். அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையிலும் உறுதியான பொருள் இருக்கும் ! சிந்தனையைத் தூண்டுவார். சிரிக்கவும் வைப்பார். ஆனால் அவர் நெஞ்சமோ போர் நெஞ்சம் ! பொறுமைக்கோ இவர் பூமி! கொள்கை வீரர்! குணக்குன்று! இவர்பேச்செல்லாம் திராவிடம், திராவிடம் ! மூச்செல்லாம்விடுதலை! விடுதலை ! ஓயாமல் திராவிட நாடு திராவிடருக்கே என்று ஒலித்துக் கொண்டிருக்கும் இவர் கணீர் என்ற குரல்! இவர் தமிழ் ஒலிக்கும் அண்ணாவின் தங்கத் தம்பி ! வாழ்க நம் நடராசர்.

★ குணக் குன்று ★

தமிழ் காத்த நடராசன் நல்ல தம்பி!

சென்னை நகரில் சில தினங்களுக்கு முன்னுல் "தமிழ்" எழுத்தாளர் மாநாடு என்பதாக ஒன்று நடந்தது. மாநாடல்ல; தவறு! "மகாநாடு." கலந்து கொண்டவர்கள் ஸ்ரீமான் வையாபுரிப்பிள்ளை, 'ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா, ஸ்ரீமான் தெ. பொ.மீ. முதலியோர்! பைத்தியக்காரர்கள் கூடி, வைத்தியர் கழகம் வைத்த மாதிரி, பரிதாபத்துக்குரியவர்கள் சிலர் கூடி எழுத்தாளர் மாநாடு நடத்தியுள்ளனர்.

இந்த மாநாட்டை நடத்தியது, "தமிழ் எழுத்தாளர் சங்கம்" என்பதாகும். இந்த சங்கத்தின் உறுப்பினர்கள் பலர், தின இதழ்களில் மொழிபெயர்ப்பாளர்களாகப் பணி புரிவோர்; சிலர், எழுத்தாளர்கள் என்கிற வெளிச்சத்தில் நடப்பவர்கள். மற்றும் சிலர், சங்கத்தில் இருப்பதன்மூலம் எழுத்தாளர்களாகக் காணப்படுபவர்கள்! ஒரு சிலர் மட்டுமே, எழுத்தாளர்கள் என்று எண்ணத் தக்கவர்கள். மாநாடு, முதல்நாள், மயிலாப்பூர் "ஹாலில்" நடந்தது; மறுநாள் மவுண்ட்ரோடு "ஹாலில்" நடந்தது. சுமார் முந்நூறு பேர், அந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். தோழர் ம. பொ. சி. தலைமை வகித்தார்; வையாபுரியாருக்கும் இராகவ (ஐயங்கா)ருக்கும், ஆராய்ச்சிச் சிறப்புக்காக கேடயங்கள் வழங்கப்பட்டன. "தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேறியது. இது, நடந்தது.

"இதிலே எத்தனைபேர், சமுதாயம் மதிக்கின்ற எழுத்தாளர்கள்?" என்கிற கேள்வி நமக்குவேண்டாம். "சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் எழுத்துக்களை அள்ளிஇறைத்தவர்கள் எத்தனைபேர்?" இது ஆராய்ச்சிக்குரியது. நாட்டுக்கு நல்லது என்று எண்ணி எடுத்து எழுதுகிறவன், அல்லது, தன்னேரிலாத எழுத்துக்களுக்குச் சொந்தக்காரன் தான் எந்த நாட்டிலும் எழுத்தாளன் என்று எண்ணப்படுகிறுன். பேனுப் பிடித்தவன் எல்லாம்எழுத்தாளன்தான் என்று முடிவு கட்டுவதானுல், பலசரக்குக்கடைக் கணக்கப்பிள்ளையும் எழுத்தாளனுகி விடுவான்!

அது போகட்டும்; அங்கே வந்த பலர், எழுத்தாளர்களல்ல என்று வாதிப்பதில் ஆராய்ச்சி நயம் இருக்காது என்பதற்காக அதைவிட்டு விடலாம். அந்த மாநாடு, முழுக்க, தமிழ் எழுத்தாளர்கள் அனைவருக்கும் "பிரதிநிதித்துவம்" கொண்டு நடந்ததா? இல்லை என்பது வெள்ளிடைமலை! இதுவும் போகட்டும். (மற்ருேர் இதை மதிக்கவில்லையே, என் செய்வது!)

பரிசு வழங்கப்பட்டதே ஆராய்ச்சிக்கு; அதற்கு வையாபுரியாரும், ராகவரும் மட்டுமே தகுதியுடையவர்களா? இல்லையெனில் ஏன் இவர்களுக்கு மட்டுமேபரிசு? அதில் தான், காட்டிக் கொடுக்கும் கயமையைத்தட்டிக் கொடுக்கும் மனப்பண்பு காணப்படுகிறது! வையாபுரியார், சில நல்லஆராய்ச்சிகளைச் செய்திருக்கலாம்; ஆனுல், தமிழின்பழஞ் சிறப்புகளை, செத்துப்போன வடமொழியின்பால் கூட்டிக்கொடுத்த குலத்துரோகி அவர்! தமிழனுகப் பிறந்த ஒவ்வொருவனும் திருக்குறள் பற்றிய அவரது ஆராய்ச்சியையும் மொழி ஆராய்ச்சியையும் நஞ்சென வெறுப்பான்! அவரைப் பைத்தியம் என்று முடிவு கட்டுவான். முடியுமானுல், பார்க்கும்தோறும் எள்ளிச் சிரிப்பான்; பரிசில் வழங்கமாட்டான்! "இனத்துரோகியின் தலைமையில் குலத்துரோகிக்குப் பரிசு வழங்கியது, "சாதிமத" பேதமற்ற எழுத்தாளர் மாநாடு!" என்று யாராவது சொன்னுல், எப்படி மறுக்க முடியும்!

வழங்கப்பட்டது 'கேடயம்' என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. கேடயத்திற்கு வேறு பொருள் இருந்தாலும், "தற்காப்புக் கருவி" என்கிற பொருள் கொண்டால் வையாபுரியாருக்கு வழங்கப்பட்ட 'பொருள்' பற்றி வேருெரு முடிவுக்கு வரலாம். அதாவது, அவரது ஆராய்ச்சியைப் படித்துவிட்டு, யாராவது மோத வந்தால், தற்காத்துக்கொள்ளக் கொடுக்கப்பட்ட கருவி அது என்கிற முடிவுக்கு வரலாம்! அதைத் தவிர, மூளைத் திறனை முழுதும் அறிந்து வழங்கப்பட்ட பரிசு என்று கொள்ள எப்படி முடியும்!

தமிழிலே வேறு எத்தனை ஆராய்ச்சியாளர்கள் இருக்கிருர்கள்! டாக்டர் மா. இராசமாணிக்கம் போன்றவர்கள், வையாபுரியாருக்கு எந்த வகையிலே இளைத்தவர்கள்? இராகவருக்குள்ள திறன்தான் அவர்களிடம் இல்லையா! பின்னணியிலே இருக்கின்ற, தினமணி, இந்து முதலியவற்றின் உதவியாளர்கள் குத்தித்தள்ள, முன்னுல் நிற்கும் பொம்மைத் தமிழர்கள் இந்தப் பரிசில் வழங்கியுள்ளனர்!

மாநாட்டில் பேசிய தோழர் தெ. பொ. மீ. யே, கூறியுள்ளார்; "வையாபுரிப் பிள்ளை அவர்களின் ஆராய்ச்சிகளை நாம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அந்தத்திராணிக்கும் துணிவுக்கும் மதிப்புக்கொடுக்கிறேம்!" என்று. இதற்கு என்ன பொருள்? "பரிசு கொடுத்தது, ஆராய்ச்சிக்கல்ல; துணிச்சலுக்குத்தான்" என்பதுதானே! ஆராய்ச்சி தவருனுலும் துணிச்சலுக்குப் பரிசு கொடுப்பதென்ருல், சிவஞானத்துக்கே அந்தப் பரிசை வழங்கியிருக்கலாமே! அல்லது, ஆபாசப் பத்திரிக்கை ஆசிரியர்களின் "அதி தீவிரத் துணிச்சலு"க்கு வழங்கியிருக்கலாமே! அறிவுடையோர், எண்ணித் தெளிவராக.

அடுத்து, மாநாட்டில் பேசிய ம. பொ. சி. தலைமை உரையில், தமிழ்க் கவிஞர்களின் படங்கள் தபால்பில்லைகளில் இல்லை எனவும், வடநாட்டுக் கவிஞர்கள் படமே இருக்கிறதெனவும் நீலிக்கண்ணீர் வடித்துள்ளார். பேசுவது, ஏக இந்தியாவுக்குட்பட்ட, சுதந்தரத் தமிழகம்; திடீரென்று ஞானேதயம் உண்டாவது, தமிழ்—வடமொழிக் கவிஞர்கள் என்ற பாகுபாட்டில்! தபால் பில்லைகளில் தமிழ்க் கவிஞர்கள் படம் இல்லாவிட்டால் என்ன, வடமொழிக் கவிஞர்களும் "பாரதமாதா" புத்திரர்கள் தானே! பாரதமாதாவை முழுமாதாவாகக் கருதி வணங்குகிற அடிமைப் பிறவிகளுக்கு திடீரென்று மொழிப்பற்று வந்து விடுகிற வேடிக்கையைப் பாருங்கள்! தென்னுட்டை அடிமை நாடாகக் கருதுபவன், எப்படி தென்னுட்டுக் கவிஞர்களின் படத்தை வெளியிடுவான்? பிரிட்டிஷார் நம்மை ஆண்ட போது, இங்கிலாந்து தபால்பில்லைகளில் காந்தியின் படமா இருந்தது? இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கமுடியுமா? சமையல் பாத்திரங்களையும் அரிசி பருப்பையும் அடுத்தவன் விட்டில் கொடுத்துவிட்டு, "நீ போடுவதைப் போடு! தின்று வாழ்கிறேன்!" என்று சொன்ன பிறகு, "சாதத்தில் கல் கிடக்கிறதே!" என்று அங்கலாய்ப்பதும், "நெய்யில்லையே! எனக்குக் கிடையாதா?" என்று கேட்பதும் பைத்தியம் முற்றியவர்களின் செய்கை! இப்படி அங்கலாய்த்தவர்தான் அடுத்துப் பேசியிருக்கிருர், "தென்னுடு, வகுப்புவாத சுயநலப்பித்துக்களில் ஆழ்ந்து கிடக்கிறது!" என்று. (காந்தியடிகள் சாகும்போது, இவரைத்தான் கையைக் காட்டி விட்டுப் போனுராம், வகுப்பு பேதமின்றி உலகைத் திருத்துவதற்கு!) இவர் 'வகுப்புவாதம்' என்று குறிப்பிடுவது மட்டும் இருபத்தைந்து ஆண்டுகட்குமுன் துவக்கப்படாமல் இருந்திருந்தால், சிவஞானம் அரசியல் தலைவராகவும்-'எழுத்தாள'(?)ராகவும் வந்திருக்கமாட்டார். மரம் ஏறி, கள் இறக்கிக் கொண்டிருப்பார். சுயமரியாதைக் காரனின் வகுப்புவாத நிழலிலே தான்இவர் வாழமுடிகிறது! வந்திருந்த ஆரியர்களின் கைதட்டுதலுக்கும், தினமணியில் இரண்டுகாலத் தலைப்பு வருவதற்கும் இந்தப் பழைய வாணத்தை விட்டெறிந்திருக்கிருர், காங்கிரசிலிருந்து, அனுதையாகத் துரத்தப்பட்டவர்! இவரைப் பின்பற்றி, தெ. பொ. மீ. யும், "பிராமணர்—அல்லாதார், ஆரியர்—திராவிடர் என்ற மாய எண்ணங்கள் நாட்டில் நிலவி வருகின்றன!" என்று பேசியிருக்கிருர். இதற்காகத்தான் நல்ல ஆராய்ச்சியாளர்களை மாநாட்டிற்கு அழைக்கவில்லை என்று கருதுகிறேன். அவர்கள் வந்திருந்தால், வரலாற்றுச் சான்றை மாய எண்ணமாகக் கருதும் தெ. பொ. மீ யை "பேடிமையால் உண்மையை மறைப்பவர்!" என்று கூறியிருப்பார்களல்லவா!

பார்ப்பனர்—அல்லாதார் பேதம் இப்போது கட்சிப் பாகுபாடின்றி உருக்கொண்டிருக்கிறது! காரணம் அதைக் கடந்து செல்லமுடியாத அளவுக்கு பார்ப்பனீயம் செயல்படுகிறது! ஆவடி காங்கிரஸ் அதைத்தான் கூறிற்று. காங்கிரசிற்குள்ளே இருக்கும் புகைச்சலுக்கு அது தான்மூலம். ம. பொ. சி; தெ.பொ. மீ. போன்ற பக்தர்களுக்கு அது, புரியாது. காரணம்அவர்கள் அதன் மூலம்தான் வயிற்றைக் கழுவுகிருர்கள்!

லஞ்ச வழக்கில் துரத்தப்பட்ட எஸ். ஏ. வெங்கட்ராம ஐயரை,
ஆச்சாரியார் தன் ஆட்சிக்காலத்தில்
"ரெவன்யூ போர்டு முதன் மெம்
பர்" ஆக்கியதும், வந்த வெங்கட
ராமையர், தாசில்தார் உத்தியோ
கம் போன்றவற்றை பார்ப்பன
களுக்கே ஒதுக்கியதும், அதனுல்
"வகுப்புவாதம் அறியாத" தமிழ
களும் ஆத்திரங்கொண்டிருந்ததும்
நாடறிந்த ரகசியங்கள். பிறகு
ஆட்சிக்கு வந்த காமராசர்கூட
அந்த ஏற்பாட்டைத் தகர்த்து
செல்ல முடியாமல் திண்டாடுகிருர்
உள்ளுக்குள்ளேயே குமுறுகிருர்
எப்படி, 'பேதங்கடந்த' கட்சிக்குள்
ளும் இதுவே மூல முதலாக நி
கிறது? ஏன்? எண்ணிப்பார்க்க
வேண்டாமா, அறிவுடையோர்? சிவ
ஞானத்தையல்ல; அறிவுடை
யோரை நான் கேட்கிறேன், இதற்
குக் காரணம் என்ன? விவேகா
னந்தா கல்லூரியில் போய்ப் பாருங்
கள்; பார்ப்பனீயம் அங்கே மாய
வித்தை செய்கிறது! செகன்னுத
ஆச்சாரியார் என்கிற பார்ப்பனர்
அங்கே தமிழாசிரியராகஇருக்கிருர்
வகுப்பிலேயே அவர் பேசுகிருராம்
"பார்ப்பனர்களை வணங்கவேண்
டும்" என்று! "சிலப்பதிகாரத்தில்
கூட, பசுக்களையும் பார்ப்பனர்களை
யும் ஒன்றும் செய்யக்கூடாது!
என்றிருப்பதாக எடுத்துக்காட்டுகிரு
ராம். "தமிழன்லெ எவன்டா
படிச்சவன் இருக்கிருன்? உ. வே
சாமிநாதய்யர் போன்ற பிராமணுள்
தாண்டா, தமிழ் ஏடுகளை எடுத்து
தந்தவர்கள்!" என்கிருராம். காம
ராசரை நையாண்டி செய்கிருராம்
உடனே மற்றப் பார்ப்பனர்கள்
வந்து கட்டித் தழுவுகிருர்களாம்
சிவஞானமும் தெ. பொ. மீயு
அவரது பாதங்களில் விழுவார்
களா? வகுப்புவாதங் கடந்த அற
வாளிகளாயிற்றே அவர்கள்
வகுப்பு வாதத்தை நீங்கள் கட
தாலும், பார்ப்பனர்கள் கடப்பா
கள் என்று கருதுகிறீர்கள்? ஏன்
இந்த எள்மூக்கு அறிவுகூட இல்லா
மல் போய்விட்டது? "நாயு
வயிற்றை வளர்க்கும்; வாய்
சோற்றைப் பெரிதென்று நா
லாமோ!"

வகுப்புவாதம் கூடாதுதான்
எங்கே கூடாது? அதற்கு, "பொரு
ளாதார, சமூக அடிப்படை"யை
தவிர வேறு அடிப்படை காரணமா
இருந்தால்! இங்கே எழுந்து, நீ
க்மற நிறைந்திருக்கும் பேதம்
எந்த அடிப்படையைக் கொண்டது
சொல்லத்தான் வேண்டுமா!

நிற்க; இன்னெரு தீர்மான
போட்டிருக்கிருர்கள், அந்த ம
நாட்டில். அதாவது "சினிம
தணிக்கை போர்டில் தமிழ் எழு
தாளர் சங்கப் பிரதிநிதியை
சேர்க்கவேண்டும்" என்று! ஐயோ
வேண்டாம்! இப்போதுள்ள ப
தாம்பசலிப் பார்ப்பனர்களே
போதும்! இன்னும் சில 'பசலி'க
நாடு தாங்காது!

சுருக்கமாக, நடைபெற்ற எழு
தாளர் மாநாடு நாட்டின் மூ
முடுக்குகளில் உள்ளவர்களின் க
களில், இவர்களே எழுத்தா
பிறவிகள் என்று காட்டத்தா
பயன்பட்டதன்றி, வேறு ஒரு பய
மின்றி, கூடிக் கலைந்துள்ளது.

எழுத்தாளர் உலகில் குறிப்பி
தக்க நல்ல எழுத்தாளர்களா
கம்பதாசன், எஸ். ஏ. பி. அண்
மலை, நாரணதுரைக்கண்ண
பரலி நெல்லையப்பர், ப. கோதண்
ராமன், வே. சாமிநாத சர்
முதலியோரும், சில நல்ல ப
பாளர்களும், இந்த எழுத்தா
களோடு மாட்டிக்கொண்டி
பதுதான் நமக்கு வேதனைய
கிறது.

★

எப்படி வரும் ஐயனே, ஒற்றுமை!

★ சாம்போது தனி நாட்டில் சாகவேண்டும்! ★

- எங்கள் -

சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்!

"தேவை! தேவை! உடனே தேவை! உடன்பாடு தேவை! ஒற்றுமை தேவை! பலமான ஒற்றுமை தேவை! உள்ள உணர்வு பூர்வமான ஒற்றுமை தேவை!"

"தேவைகள் - உங்கட்குப் பல உண்டு. தெரியும் எங்கட்கு! தேனும், பாலும் தெருவெலாம் ஓடும், தெவிட்டாத இன்பம் பொங்கி வழியும் உங்கள் வாழ்வில் நாம் நாடித் திரியும் சுதந்திரத்தைத் தேடிப் பெற்றுவிட்டால், இந்த நாட்டை விட்டு அந்த வெள்ளையன் ஓடிவிட்டால்!" என்று கூறினோம் அன்று. இன்று வெள்ளையன் வெளியேறி விட்டான். ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று ஆடினோம், பள்ளுப் பாடினோம், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று பறைசாற்றினோம். என்றாலும்.....தேனும் பாலும் தெள்ளமுதும் தெவிட்டாத இன்பமும் நீங்கள் தேவை என்று கூறுவிட்டாலும், வேங்கை எனப் பாய்ந்து கொல்லும் வேலை இல்லாக் கொடுமை தேளெனக் கொட்டி வாழ்வைத் தேய்க்கும் வறுமையும், பாம்பெனக் கொத்தி பத்தும் பறந்திடச் செய்யும் பசியும் அகன்றிட்டால் அதுவே போதும். எங்களின் உடனடித் தேவை இதுதான்' என்று நீங்கள் கோருவது தெரிகிறது எங்கட்கு.

அதற்குத்தான் இதோ திட்டம் ஐந்தாண்டுத் திட்டம். முதல் திட்டம் அது. இதோ இரண்டாம் திட்டம் தயாராகிறது. சோஷியலிசம் மாதிரி அடிப்படை கொண்ட சமூகத்தை அமைக்கும் திட்டம், உங்கள் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்ய. பத்தாண்டுகளில், பறந்துவிடாதா, வேலை இல்லை அதனால் வாழ்வில்லை என்ற அவலநிலை! இந்தத் திட்டங்களினால் அத்திட்டங்களுக்கான பணவசதியை வெளிநாடுகளுக்கு ஓடியேனும் தேடிப் பெற்று வாடி வதங்கும் உங்கள் வாழ்வைச் செப்பனிடத்தானே கூடியுள்ளோம், ஆட்சி மன்றத்தில்.

"ஆனால், ஆனால்......"

"உங்கள் தேவைக்கு, வரண்ட உங்கள் வாழ்வு வளம்பெற, நாங்கள் திட்டமிடுகிறோம். ஆனால், உங்களிடையே ஒற்றுமை இல்லை. மாகாணப் பித்தும், தான் என்ற தன்னலமும் தலைவிரித்தாடுகின்றன. அது ஆகாது-கூடாது. உங்கள் தேவைகளுக்கு நாங்கள் திட்டமிட்டு வேலை செய்கிறோம். எங்கள் தேவைக்கு?

எங்கள் தேவை, ஒற்றுமை. ஆம்! உங்களிடையே ஒற்றுமை- நீங்கள் எல்லோரும் இந்தியர் என்று எண்ணும் உணர்வு பூர்வமானஒற்றுமை- அதுதான் இப்போது தேவை. அதுவும் உடனடியாகத் தேவை. நாட்டில் பிரிவினைக் காய்ச்சல் வலுப்பெற்று வருகிறது. அது வெறும் கூச்சல். நீங்கள் செவிசாய்க்கக் கூடாது. ஆதரிக்கக் கூடாது. பிரிவினை, நாட்டைச் சீர்குலைக்கும், பின்னும்பின்னப்படுத்தும். அதனால் வறுமையும்சீரழிவும்தான்மிஞ்சும்.

எனவே, பிரிவினையை எண்ணாதீர். ஒற்றுமையை எண்ணுவீர். அதன் உயர்வை உன்னுவீர். அதனை வளர்க்க நண்ணுவீர்.

நமது பெருமை நாடெங்கும், நானிலமெங்கும், நாற்றிசையும் புரவி வேகத்தில் பரவி வருகிறது பாரீர்!

அதோ கொரியா! அடுத்து இந்தோசீனா! போர்ப்புயல்வீசிக்கொண்டிருந்த பூமிகள். இன்று அங்கெல்லாம் அமைதியெனும் தென்றல் வீசச் செய்தவர் நாம். அந்த அமைதித் தென்றலுடன் நமது சமாதானப் பணியெனும் மணமும் கலந்து வீசுகிறது, நுகர்வீர்.

அதோ சீனாவில் சமாதான தூதுவராக பண்டித நேரு பவனி வருவதை அவனியே கவனிக்கிறதே, காணவில்லையா நீங்கள்?

இதோ! சோவியத்தின் கோபத்தைக் காண நேருவே வருக! சமாதானப் பிரியரே வருக! என்ற அன்பழைப்புக் குரலைக் கேட்கவில்லையா நீங்கள்?

உலக அரங்கம் கலக நிலைபெறும் போதெல்லாம், கவலை அகல விரோதம் விலக, நட்பு மலர, அமைதி நிலவ அரும்பாடு பட்டு 'அற்புதமானபணி-செய்தற்குஅரிய காரியம்-பாராட்டுக்கு உரிய சேவை' என்ற பாகுமொழிப் பாராட்டுக்கள் பாரெங்குமிருந்து பறந்து வருவதை நோக்கவில்லையா நீங்கள்.

இவைஅத்தனையும், அரியசெயல்-உயரியசேவை - சமாதானப்பணி என்ற பெருமையும் புகழும், பாராட்டும் இந்தியாவிற்குக் கிடைக்கின்றனவே.

அந்தப் பெருமையை சிறுமைப் படுத்துபவர்கள், புகழை இகழும் புல்லர்கள், பாராட்டினைச் சீராட்ட மறுக்கும் சிறுமதியாளர்கள் தான் இந்தப் பிரிவினைக் கூச்சல் போடுகிறார்கள்.

அத்தனை பெருமைக்கும் காரணமான 'அகில இந்தியா'வைத் துண்டாட தூபம் போடுகிறார்கள்? நியாயமா?

தூங்காதீர்கள் இனியும் அந்த துன்மார்க்கர்கள் தொலையவேண்டும். அவர்களைத் துவம்சம் செய்ய துந்துபி முழங்கட்டும். 'வந்தே மாதரம்! வாழ்க பாரதம்! வீழ்க பிரிவினை! என்ற கோஷம் வானைப் பிளக்கட்டும்! ஒற்றுமையைக் காப்போம். வேற்றுமையை ஒழிப்போம். புறப்படுவீர் பிரிவினை கோரும் புல்லர்களை ஒழிக்க.

பாரதத்தின் பெருமையை பாரதிரக்கூவுவோம். பாரத புத்திரர்கள்,-அவர்கள், பாராளுவோர் முதல், பாமரர் வரையில், காஷ்மீர் எல்லைமுதல், கன்யாகுமரி முனை வரையில் இந்த கண்ட நிலப்பரப்பில் வாழ்வோர் எல்லோரும்-பாரத புத்திரர்கள் - இந்தியர்கள் என்ற ஒற்றுமையை கட்டி வளர்க்க, காப்பாற்ற முற்படுவோம்- இந்திய ஐக்கியத்தை, ஒற்றுமையை வலுப்படுத்த சங்கல்பம் செய்வோம்.

இப்படி காங்கிரஸ்காரர்கள், அதிலும் பெரும் தலைவர்கள் நாட்டு மக்களைக் காணும்போதெல்லாம் போதனை புரிவதை நாம் காண்கிறோம்.

'ஒற்றுமையே நம் வாழ்வு, ஒற்றுமையே நம் பெருமைக்குக் காரணம், ஒற்றுமையே நம் பலத்திற்கு அடிப்படை! என்று கூறி-மக்களே! இந்தியா பூராவும் ஒரே நாடு. அதில் வசிக்கும் மக்கள் எல்லோரும் இந்தியர் என்ற எண்ணம் கொள்வீர். பேதம் பேசாதீர்! வடக்கு, தெற்கு என்று கூறாதீர்,' என்று அது ஆவடி மநாடாயினும் சரி அல்லது குழந்தைகள் கூட்டமாயினுஞ் சரி அல்லது மகான் காந்தியின் பிறந்த நாள் விழா வாயினுஞ்சரி மக்கள் சபை விவாத மாயினுஞ்சரி, 'எல்லோரும் ஒன்று' என்ற ஒற்றுமை கீதத்தை தங்களுக்கே உரித்தான உபதேச ராகத்தில் பாடத் தவறுவதில்லை காங்கிரஸ்காரர்கள். பண்டிதர் போன்ற பெரிய மனிதர்கள், அந்த ஒற்றுமை கீதத்தை 'வேறு' ராகத்திலும் இசைப்பர்.

காங்கிரஸ்காரர்கள் தான் பிற்போக்கு வாதிகளாயிற்றே!

முற்போக்கு வாதிகள், புரட்சி வீரர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் கம்யூனிஸ்டுகள்? அவர்களும் அப்படித்தான்!

"இந்த நாட்டிலே இயங்கி வரும் திராவிடர் இயக்கத்தவர், பல்வேறுஇந்திய சகோதர (?) தேசிய இனமக்களிடையேவேற்றுமையைக் கற்பித்து (?) பிளவு மனப்பான்மை வளர்த்து, இந்திய நாட்டில் நிலவும் (?) கலாச்சார ஒற்றுமை(?)யைச் சீர்குலைக்கும் அழிவு வேலையைச் செய்பவர்கள்."

இது முற்போக்கு வாதிகளெனத் தங்களைக் கூறிக்கொள்ளும் கம்யூனிஸ்டுகள் திராவிடப் பிரிவினைக் கெதிராக, மாநிலப் புனரமைப்புக் குழுவிடம் தந்த கருத்துரை.

இதைப் போலவே இந்த நாட்டில் உள்ள எல்லா அகில இந்தியக் கட்சிகளும் "இந்தியா ஒரே நாடு தான். அங்கு வாழும் மக்கள் எல்லோரும் இந்தியரே!" என்ற அடிப்படையில் வேறுபாடு இன்றி, ஒற்றுமை கீதத்தை அவரவர்களுக்குப் பிடித்த இராகங்களில் பல்லவி அனுபல்லவிகளுடன் இசைத்து வருகின்றனர்.

இந்தியாவில் இல்லாத, இதுவரை இருந்தில்லாத, இனியும் எப்போதும் இருக்கமுடியாத 'எல்லோரும் இந்தியர், இந்தியா பூராவும் ஒரே நாடு' என்று, எல்லா மக்களும் உணர்வு பூர்வமாக எண்ணும் ஒற்றுமையை நிலைநாட்டிவிட பண்டித நேருவின் தலைமையில் புதிதாக உருவெடுத்து தலைகனத்துடன் உலவ எண்ணும் இந்தியப் பேரரசு எத்தனிக்கிறது. அவரது ஆதிபத்திய அடிச்சுவட்டைப் பின்பற்றவே எல்லா அகில இந்தியக் கட்சிகளும், ஒற்றுமை கீதம் இசைக்கின்றனர்.

ஆனால், இந்தியத் துணைக்கண்டத்தின் சரித்திரத்தை, 'இந்தியா' என்ற அரசியல் அங்கம் உருவாக்கப்பட்ட வரலாற்றை, இந்தத் துணைக்கண்டத்தில் வாழும் மக்கள் பல இனத்தவர், பல கலாச்சாரத்தினை பண்பாடுகளைக் கொண்டவர்கள், அந்த மக்கள் கூட்டங்களின் வாழ்வின் அடிப்படையே முரண்பட்டிருக்கின்றன; என்ற பிரத்யட்ச உண்மையை மறந்துவிடுகின்றனர். அல்ல,அல்ல,மறைத்துவிடப் பார்க்கின்றனர். அதனால் தான், இந்தியாவின் பெருமையை, அதன் சமாதானப் பணியைக் காட்டி, இந்தியா என்றும், எல்லோரும் இந்தியர் என்ற ஒற்றுமையை நிலைநாட்டிவிட மனப்பால் குடிக்கின்றனர்.

இந்தியாவில், மக்களிடை எல்லோரும் இந்தியர் என்றெண்ணும் உணர்வு பூர்வமான ஒற்றுமை ஐக்கியம் இல்லை என்ற உண்மையை பண்டித நேருவே ஒப்புக்கொண்டிருக்கிறார். "நம்மிடம் இருப்பதெல்லாம் பலமான அசைக்கமுடியாத மத்திய அரசாங்கம் மூலமாக உள்ள அரசியல் ஒற்றுமைதான். நம்மக்களிடை உணர்வு பூர்வமான ஐக்கியம் இல்லை" **(What we have is that there is a strong and stable Central Govt. by which we maintain the Political unity of India. We don't have here the emotional Integrity among the people)** என்று சில மாதங்களுக்கு முன் பண்டிதர் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படி இங்கு இல்லாத ஒற்றுமையை மக்களிடையே ஊட்டி, வேரூன்றச் செய்து 'இந்தியா' என்ற ஏகாதிபத்தியத்தை நிலைத்து விடச்செய்யப் 'பகீரதப்பிரயத்தனம்' செய்கின்றனர் எல்லா அகில இந்தியக் கட்சியினரும். அதற்காக ஒற்றுமை கீதம் இசைக்கின்றனர்.

அவர்கள் இசைக்கும் ஒற்றுமை கீதம் ஆவடியில் தீர்மானமாக உருப்பெற்றிருப்பது, நாட்டில் எழுந்துள்ள வலுமிக்க பிரிவினை முழக்கத்தின் எதிரொலி தானே!

நாம் மட்டுமா திராவிடத்தைப் பிரிக்க வேண்டும் என்று கோருகிறோம்?

நாகர்கள், நாங்கள் மலைவாழ் மக்கள், தனியான பண்பாடும், சரித்திரப் பின்னணியும் கொண்டவர்கள். எங்கள் 'தனி நாடு' கோரிக்கை இந்திய சுதந்திரத்திற்கு முன்பே எழுப்பப்பட்டதாகும். எவரும் எங்களை ஆள்வதற்கு அனுமதிக்கமாட்டோம். நாகநாடு அமைத்தே தீருவோம். இது அசாம் மாகாண எல்லையிலிருந்து வெளி வரும் உரிமைக்குரல்! பிரிவினை முழக்கம்.

இன்று, இதோ எங்கள் பூமி, சீக்கியர்களின் நாடு. நாங்கள் வேறு, இந்தியர் வேறு, எங்களுக்கும் எல்லா உரிமைகளும் வேண்டும். பஞ்சாப் மொழி பேசுகிற வெறும் மொழிவழி மாநிலத்துடன் திருப்தியடையமாட்டோம். சர்வ சுதந்திரங்களும் பெற்ற சுயாட்சி உரிமை எங்களுக்கு வேண்டும். எங்களை நாங்களே ஆள்வோம்.

(9-ம் பக்கம் பார்க்க)

இட்லரின் கடைசி நாட்கள்!

(12-2-55 இதழின் தொடர்ச்சி)

நீண்ட காலம் நான் அங்கு போகாமலிருந்தும் வாயிற்காக்கும் எஸ். எஸ். இராணுவ வீரர்கள் என்னைப் புன்சிரிப்புடன் வரவேற்றனர். தலைமை அலுவலகத்திலே முதல் மாடியில் உள்ள ஒரு அறையில் என்னைத் தங்கச் சொன்னார்கள். அந்த அறையிலிருந்த ராணுவத்தலைவர்களான கீட்டலும் ஜோடலும் என்னை வரவேற்று "இது தான் ஹின்டர்ன் பர்க் உபயோகித்த அறை. நல்ல வேளையாக விமானக் குண்டு வீச்சுக்கு இது இன்னும் இலக்காக வில்லை. நீங்கள் திரும்பி வந்தது மிகவும் நல்ல வேளைதான். இட்லரை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்க, ஒருவர்-அதிலும் நீங்கள்-மிகவும் அவசியத்தேவைதான்" என்றார்கள்.

பிறகு இட்லர் அங்கே வந்தான். அவனைப் பார்த்ததும் எழுந்து அவனை நோக்கிச் சென்றேன். அவன் இரு கைகளையும் முதுகுப் புறமாகக் கட்டிக்கொண்டு, "நீ எப்படி இங்கே வந்தாய் ஆப்மன்? உனக்குத்தான் விஷஜுரம் கண்டிருந்ததே? நீ வருவதால் எங்கள் எல்லோருக்குமே ஆபத்தாச்சே" என்றான்.

இதற்குமேல் என்னால் பேசாமலிருக்க முடியவில்லை. "நான் சௌக்கியமாகத்தான்இருக்கிறேன். எனக்கு விஷஜுரமே இல்லை. இதெல்லாம் கட்டுக்கதை. அதை நிரூபிக்க என்னால் முடியும்" என்றேன். வேறு எதுவும் கூறாமல் இட்லர் வெளியே போய்விட்டான்.

சிறிது நேரத்தில் போர்மன் வெறிபிடித்தவன் போல் எனனருகில் வந்தான். "எந்த நாய் உன்னை இங்கே அழைத்தது?" என்று கத்தினான். அந்தச்சமயம் அபாயச் சங்குகள் அலறின. "இந்த இடம் பைத்தியக்கார ஆஸ்பத்திரி போல் இருக்கிறது" என்று பதிலுக்கு நானும் கத்தினேன். பிறகு என்னுடைய மூட்டை முடிச்சுகளுடன் புறப்படத் தயாரானேன்.

சிறிது நேரத்தில் இட்லரின் காரியதரிசி ஜோஹன்னா ஒல்ப் **(Johanna Wolf)** வந்தான். எனக்கு ஏற்பட்டிருக்கும் வியாதிபற்றி இட்லரிடம் எதுவும் பேசக்கூடாது என்ற நிபந்தனையில் இட்லரைப் பார்க்க என்னை அனுமதிப்பதாகக் கூறினான். நள்ளிரவில் பெர்லின்மீது நடந்த எதிரி விமானங்களின் குண்டு வீச்சு ஓய்ந்ததும் இட்லர் இருக்குமிடம் சென்றேன்.

"ஆப்மன்! ஒரே ஒரு வேண்டுகோள்! தயவு செய்து உன்வியாதியைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேச வேண்டாம்" என்றான் இட்லர்.

நான் பதில் பேசாமல் வைத்திய, சுகாதார நிலையங்கள் தந்த பத்திரங்களை அவனிடம் நீட்டினேன்.

...ர் இறப்பதற்கு, பத்து நாட்களுக்கு முன்பு எடுத்த படம்

"இல்லை, இல்லை! இதை டாக்டர் மோரெலிடம் கொடு. உன்னை முதலில் நான் பார்த்ததுமே நீ ஆரோக்கியமாய் இருக்கிறாய் என்ற முடிவுக்கே வந்து விட்டேன். இனிமேல் அதைப் பற்றி எதுவும் பேச வேண்டாம்" என்றான்.

அங்கு இட்லரும் ஏவாபிரானுமே இருந்தார்கள். மணியைத் தட்டியதும் வேலையாள் அங்கே வந்தான். "ஒரு டீ கொண்டு வா!" என்றேன்.

"டீ ஏன்?" என்று கேட்டான் இட்லர்.

"எனக்குச் சாராயம் கொடுக்க வேண்டாமென்று போர்மனுக்கு நீங்கள் கட்டளையிட்டிருப்பதாக உங்கள் காரியதரிசி சொன்னாரே!" என்றேன்.

"உனக்கு எது வேண்டுமோ அதைக்குடி! ஏய்! ஐயாவுக்கு சாம்பேன் **(Champagne)** கொண்டுவா!" என்று உத்தரவிட்டான் இட்லர்.

"நீண்ட நாட்களுக்குப் பிறகு இன்றுதான் நாம் மூவரும் தனித்திருந்து நிம்மதியாகப் பேசுகிறோம்" என்றான் இட்லர் நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டே.

நானும், ஏவாவும் எங்கள் மதுக் கோப்பைகளை இட்லருடைய மதுக் கோப்பையுடன் உயர்த்தி, பின்னர் அருந்தினோம்.

"எவ்வளவு காலம் இங்கே தங்கப் போகிறாய்?" என்று கேட்டான் இட்லர்.

"நாளைக்கே புறப்படப் போகிறேன்"

"இங்கே சிறிது நாட்களாவது தங்கப் போவதில்லையா? உன்னிடம் பேச வேண்டியது அதிகமிருக்கிறது"

"எனக்கு அவசரவேலைகள் இருக்கின்றன. எல்லாவற்றிலும் முக்கியமாக என்னுடைய உயில் தயாராக வேண்டும்"

"உன்னுடைய உயிலா? இப்பொழுது என்ன அவசரம்? அதற்குத்தான் காலம் அதிகமிருக்கிறதே?",

இட்லர் சோபாவிலிருந்து நிமிர்ந்து உட்கார்ந்தான். வெற்றிமீது இட்லர் இன்னுமா நம்பிக்கை வைத்திருக்கிறான்? எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

மறுநாள் இரவு, சோபாவில் சோர்வுடன் இட்லர் படுத்திருந்ததைப் பார்த்தேன். அதே சோபாவில்தான் இட்லரும், ஏவாபிரானும் பின்னால் இறந்து கிடந்தார்களாம்.

நான் பார்த்த சமயம் அவனுடைய முகம் பல நாட்கள் தூக்கமின்மையால் களையிழந்து காணப்பட்டது. அவனுடைய இடது கை நடுங்கிக் கொண்டிருந்தது. அவனுடைய நடையிலே விறுவிறுப்பு இல்லை. இந்நிலையில் இட்லரைப் பார்த்ததும் எனக்குத் துக்கம் பீறிட்டது.

"நீ போகும் பொழுது எப்படியாவது ஏவாபிரானையும் அழைத்துச் செல்ல ஏற்பாடுசெய். அவளுக்காக, இந்தச் சூழ்நிலையில் என்னுடைய மோட்டாரை அனுப்பமுடியாது. அப்படி அனுப்புவதும் அபாயம். மூனிச்செல்ல நீ எப்படி ஏற்பாடு செய்திருக்கிறாய்?" என்று கேட்டான் இட்லர்.

"போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுடைய காரில் எனக்கு இடம்தர ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அனேகமாய்அந்தக்காரில் கூட்டமிருக்காது. எப்படியாவது ஏவாவுக்கு தைரியம் சொல்லி, அவளை அழைத்துப்போக முயற்சிக்கிறேன்" என்றேன்.

ஆனால் ஏவா என்னுடன் வர கண்டிப்பாக மறுத்துவிட்டாள். பெர்லினை விட்டு அசைய முடியாது என்று சொல்லிவிட்டாள்.

"எனக்கும் இட்லருக்கும் உள்ள சம்பந்தம், மற்றெல்லோரையும் விடஉங்களுக்கு நன்றாகத்தெரியும். இவ்வளவு காலம் அவருடன் வாழ்ந்தபிறகு, ஆபத்தான சமயத்தில் தேவையான நேரத்தில் நான் அவரைவிட்டுப் பிரிவது சரியா? இல்லை! கடைசி மூச்சுவரை அவரை விட்டு நான் பிரிய மாட்டேன்" என்றாள்.

இட்லரிடம் இதைச் சொன்னேன். மௌனமாகக் கேட்டான். அதே சமயம் விமானக்குண்டு வீச்சு பெர்லின் நகரில் நடந்து கொண்டிருந்தது. அபாயச் சங்கும் அலறிக் கொண்டிருந்தது. எங்கள் அருகேயும் சிலகுண்டுகள் வீழ்ந்தன. நாங்கள் இட்லரின் பாதுகாப்பறையில் பத்திரமாக இருந்தோம்.

நான் பெர்லின் நகரை விட்டுப் புறப்படுமுன்பு இட்லரைப் புகைப் படம் எடுத்துக்கொண்டேன். அதற்குப் பிறகு இட்லரையோ, ஏவாபிரானையோ நான் சந்திக்கவேயில்லை.

ஒரு வாரத்திற்குப் பிறகு மூனிச் நகரத்தில் அமெரிக்கர்களால் விசாரிக்கப்பட்டேன். என் வீடு சூறையாடப் பட்டதையும், மிகவும் அவசியமான புகைப்படங்கள் கொள்ளையிடப் பட்டதையும் அவர்களிடம் தெரிவித்தேன். ஆனால் ஒருவன் என் தலையில் ஓங்கி அடித்து "பாசிஸ்ட் பன்றியே" என்று, என்னை மேலும் பேசவிடாமல் செய்தான்.

ஐரோப்பிய மியூசியத்திலிருந்து, இட்லருக்காகவும், கோயரிங்குக்காகவும், நிறைந்த செல்வத்தை நான் கொள்ளையிட்டதாக என்மீது குற்றம் சாட்டி, கைது செய்யப் பட்டேன். ஆனால் அந்தக் குற்றம் ருசுவாகவில்லை.

தண்டனையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஆசிரியர் 'என்ரிச் ஆப்மன்'

பின்னர் பல இடங்களில் பலதலைவர்களுடன்சிறைவாசம் செய்தேன். என் மனைவியும் மகளும் வீட்டிலுள்ள ஆபரணங்களை விற்று நாட்களைக் கழித்து வந்தனர். பல வழக்குகளுக்கு அமெரிக்கர் என்னை சாட்சியாக உபயோகித்துக் கொண்டனர்.

31-1-47ல் எனக்கு, பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தார்கள். அத்துடன் என்னுடைய சொத்துக்களையும் அரசாங்கம் பறிமுதல் செய்து கொள்ளுமென்றும், என்னுடைய வாக்குரிமை பறிக்கப் பட்டதாகவும், சிறையிலிருந்து விடுதலையானதும் எந்தத் தொழிலும் செய்யக் கூடாதென்று தடை விதித்திருப்பதாகவும் கூறப்பட்டது.

1950-பிப்ரவரியில், மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டேன். என் சொத்தில் ஐந்தில் ஒரு பகுதி திருப்பிக் கிடைக்குமென்றும் கூறினார்கள். அதுவரை எனது தினசரி தேவைக்கு பவேரியா அரசாங்கமே உதவி செய்து வருகிறது.

—தமிழாக்கம்: க. நா.

★

வசைபுராணம்!

ஆங்கிலப் பேரறிஞர் டாக்டர் ஜான்சனைப்பற்றி சில 'தவளை'ப் பத்திரிகைகள் ஓயாமல் வசைபுராணம் பாடிக்கொண்டிருந்தன. இல்லாததையெல்லாம் இட்டுக்கூட்டி கொட்டைத் தலைப்புகளில் 'சரடு' விட்டுக் கொண்டிருந்தன.

ஒரு நாள் நண்பர் ஒருவர் டாக்டர் ஜான்சனைப் பார்த்து,

"ஏன் நண்பரே! இரண்டொரு பத்திரிகைகள் ஓயாமல் உங்களை வசைபுராணம் பாடிக்கொண்டிருக்கிறதே, உங்களுக்குத் தெரியாதா?" என்றார்.

அவர் அமைதியாக 'நண்பர்கள் சொல்லக் கேட்டேன்' என்றார்.

'பிறகு ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்' என்றார் மீண்டும் அந்த நண்பர்.

அதற்கு ஜான்சன் சொன்னார். "என்னைப்பற்றி எழுதாவிட்டால் அந்தப் பத்திரிகைகளை வாங்குவதற்கு ஆள் இருக்காது. அப்படி யாருமே வாங்காவிட்டால் அந்த பத்திரிகையை நடத்துபவர்கள் பிச்சையெடுக்க வேண்டும். எப்படியோ என்பெயரால் இரண்டொருவர் வயிறு வளர்த்துக் கொள்கிறார்களே அதற்காக மகிழ்ச்சியடைகிறேன்", என்று லேசாகச் சிரித்துக் கொண்டே கூறினார்.

இலக்கியத்தில்

கூளப்ப நாயக்கன் காதல்

—: காரை முத்துப்புலவர் :—

“அடிபெண்ணே! உன் சொல்லுக்குத் தோற்ற, கிளியின் மூக்கு முனைச் சிவப்பு மட்டும் உன் நகத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டதடி! பல பாடல்களைக்கற்று. பாவின இயல்கண்டு, பல கவிதைகள் எழுதிப்பழகி, அந்தக் காவியக்கலை கைவந்த கலையாக மாறிய பிறகு, வந்த அனுபவம் முழுவதையும் திரட்டி, அற்புதமான காவியம் எழுதி அரங்கேற்றும் கவிஞனைப் போல, (நாலுமுகம் படைத்து, தலைவைத்துப் படுக்க முடியாமல் திண்டாடும்) பிரமதேவனுனவன், தந்தச் சிமிழைப் படைத்து, தாளவட்டம் படைத்து, வம்பைச் சமைத்து வடிவுகண்டு, மால்யானைக் கொம்பைச் சமைத்துக் குணஞ்சற்று அதிலறிந்து, தேங்காயைச் செய்து திரட்சிகண்டு, பொற் குடத்தைப் பரங்காகச் செய்து பண்புகண்டு, விந்தைதரு மேருமுதல் வெற்பெல்லாம் செய்து, கைவந்த பிறகு, அந்த அனுபவத்தைத் திரட்டி எடுத்து உன்னைச் செய்தானே! மன்மதனுகப்பட்டவன், உன் மீது வைத்தகண்ணைப் பேர்த்தெடுக்க முடியாமல் நின்றதால், அவன் கண்களிலிருந்த கருப்பு வந்து ஒட்டிக் கொண்டதோ! வாழைத் தொடை இரண்டும் மன்மத மாளிகையின் தூண்கள் என்று கூறலாமே!” என்று மூச்சுவிடாமல் முழங்குகிறுன்! பாக்கியிருப்பதையும் கூறினல் மரியாதை கெட்டுவிடும்! அவ்வளவு ‘டீப்’பாகப் போகிறுன்! “உனது பின்னழகைக் கண்டால், ரதியை மன்மதன் நாடுவானே! உன்னேடுதானே வந்துவிடுவான்! உனது முன்னழகைக் கண்டால் முனிவர்கள் தவமா செய்வார்கள்!” என்று அழுத்தமாகக் கூறுகிறுன்.

சேடியரும் இல்லாமல், தேன்
மொழியீர்! இவ்வனத்தில்
நாடிவரப் பெற்றதுவும் நான்செய்த
பாக்கியமோ!

என்கிறுன். தனியாக அவள் நிற்பதைப் பார்த்து, அவன் மனது கிளுகிளுத்து விட்டதாம்! “இது நான் செய்த பாக்கியந்தான்” என்கிறுன்.

கையணை வைத்துங்கள் கழுத்தின்
மணம் மோந்து கொண்டால்
ஐயமறச் சங்கமுகம் ஆடும் பல
னலவோ

என்று, கனவை, வெளிப்படுத்துகிறுன்.

“நீங்கள் (மரியாதை) என்னேடு வந்தால் நான் அப்படி இப்படியெல்லாம் மகிழ்வேனே!” என்று சொல்லக் கூடாததெல்லாம் சொல்கிறுன்! எல்லாம் மிகவும் சுவையோடிருந்தாலும் அவற்றைச் சொல்லமுடியாத நிலையிலே அவனது வார்த்தைகள் விழுந்துள்ளன! அவ்வளவு மோசம்! கடைசியாக அவன் கெஞ்சுவது மட்டும் ஆபாசமில்லாமல் இருக்கிறது!

“இப்பொழுது நீ என் சொல்லுக்கு இணங்க வேண்டும்! மின்னே! உனைக்கலந்து மேவாமல் நான் போகமாட்டேன்! ஓடி, வலைகட்டிப் பிடிக்காமல் தானுக வந்து நிற்கும் மானை விட்டுப்போவேனே! காடு தேடி அலையாமல் எதிரில் ஆடி நிற்கும் மயிலைப் பார்த்துவிட்டு, சும்மாவா செல்வேன்! தேன்சொரியும் மலரைக் கண்டபிறகு, வண்டு, மதுவுண்ணுமல் செல்லுமா! காந்தர்வ நியாயம்போல, கண்டவுடனே இணங்கிச் செய்துகொள்ளும் திருமணந்தானே திருமணம்! நீ சொல்லலாம்; தாய்தந்தையரைச் கேட்க வேண்டும் என்று! அடிபைத்தியமே! புராண மூட்டைகளை நீ படித்ததில்லையா! காணும் வள்ளிதனைக் கந்தனுர் கூடியதும், மானுள் சுபத்திரையை வாள் விசயன் கூடியதும், தாங்களே சம்மதித்தோ; தாய் தந்தை சம்மதித்தோ! பார்த்த உடனேயே அவர்கள் பறிமாறிக் கொண்டுவிட்டார்களே! இதெல்லாம் தாய்தந்தையரைக் கேட்கும் வரை தாங்காதம்மா! மாங்குயிலே! என்னை மருவுவதே காரியங்காண்! முத்துமோகனமே! என்னை நிலக்கோட்டை வேந்தனென்று நீ அறிவாயே! நானும் நவபுரியான், நாரியர் சிகாமணி நீ! இதற்குமேல் என்ன பொருத்தம் வேண்டும்!” என்று மேகத்தை நோக்கி ‘வருண செபம்’ பண்ணுகிற மாதிரி செபிக்கிறுனும்! அதுவும் எந்த மேகத்தின் முன்னே! தானே மழைபெய்யத் தயாராகி சூல்கொண்டு நிற்கும் மேகத்திற்கு எதிரே! இதில்தான் கவி அவளது முடிவை சுலபமாக நிலை நிறுத்துகிறுன்!

“இந்தப்பயல் போய் கெஞ்சுகெஞ்சென்று கெஞ்சுகிறுனே; எதற்காகக் கெஞ்சவேண்டும்! அவள் தான் ‘எவர்ரெடி பாட்டரி’ மாதிரி நிற்கிறுளே! ‘வா’ என்றுல் வருகிறுள்” என்கிற மாதிரி முத்தாய்ப்புவைக்கிறுன்! அவள் தானும் மையலாகி விட்டாளாம்! அதை இப்படிக் கூறுகிறுன். அவள் இவனிடத்தில் வைத்தமையல் தாங்காமல் நிற்கவே, இவன் அவள் கையைத் தொடுகிறுன். அவள் மயிர் கூச் செறிகிறுள்! என்ன இருந்தாலும், முதல் தடவையாக ஒரு ஆடவன் தொடும்போது மயிர்க் கூச் செறியத்தானே செய்யும்! உடனே, பேகனெனும் பெஞ்சைப் பெரிய நாகேந்த்ரதுரை, நாகரிகமோக நவரத்னமாலையுடன், தேன்சொரியும் முல்லைக் கொடியும், மல்லிகையும் பைங்கொடியுமாகப் படர்ந்த மணி மண்டபத்தில் பூத்து உதிர்ந்த பூக்களை மெத்தையாகக் கொண்டு, வாய்த்த ரதியும் அந்த மம்முதனும் போலிருந்து, சிவு பிளவருந்தி, செய்கைச் சுருள் பகிர்ந்து, கோவையிதழ் முத்தமிட்டு, கொய்யுமலர் முடித்து, கட்டி அணைத்து, கனிவாயிதழ்பருகி, பொற்கொம்பும் பூங்கொடியும் பூண்டுதுவண்டாடுதல் போல், நெக்குருகி நெக்குருகி, நெற்றிகளின் முத்து உதிர, பாகு போன்ற வாய்மொழிகள் பாதிதடுமாற, வரிவிழிகள் கடைபுரள, மதுர இதழ் வெள்ளமையுற, ஆவி ஒன்று உடலிரண்டில் ஆசையொன்ருகி, தாபந்தணிந்து சந்தோஷங்கொள்ளுகின்றுர்! (இதிலே பல வரிகளை சொல்ல முடியாமல் விட்டுவிட்டேன்! நமக்கெதற்கு அந்தத் ‘தப்பு!’)

இப்படி இவர்கள் உல்லாசமாயிருக்கும்போது, கூளப்பனை விட்டுப் பிரிந்த படைகள், அவனைத் தேடிவருகின்றன. படைவரும் ஓசைகேட்ட கூளப்பன் மின்னை நிறுத்திவரும் மேகம்போல், மின்னை நிறுத்தி வந்து தானைக்கு எதிராகிறுன். படைகள், “வாய்யா போவோம்!” என்கின்றன. அவன் மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் முடியாமல், அவளிடம் சொல்லிக் கொள்ளத்திரும்ப முடியாதவனுய், படைகளோடு ஊர்போய்ச் சேர்ந்து விடுகிறுன்.

ஊரிலே அவனுக்கு ஏக வரவேற்பு! எதற்கு? அவன், காதல் புரிந்து வந்ததற்கா? இல்லை! வேட்டையாடி வந்ததற்கு! கன்னி வேட்டையல்ல; மிருக வேட்டை! வரவேற்பிலே சில குமரிகள், ஆல்வட்டம் வீச, சில குமரியர் ஆலத்தி எடுக்க, மற்றும் மாலைசரியச் சில மங்கையர்வர, சேலை சரியச் சில சேயிழையார் ஓடிவர, அங்கேயும் ஒரே ‘கிளாமர்’ காணப்படுகிறது! சிலபெண்கள், அவன் மாலை தருவான் என்று ஓடி, தங்கள் கைவளையையும் இழந்து விட்டுத் திரும்புகிறுர்களாம்! தேடுபுகழ் வேந்தனுடன் செல்லும் தங்கள் மனதைப் பிடிக்க, ஓடி அயர்கிறுர்களாம் சிலர். அவனது உதட்டில், நவரத்னமாலையின் பல் பதிந்த அடையாளத்தைப் பார்த்துவிட்டு தங்கள் உதடுகளைத் தாங்களே கடித்துக் கொண்டு திரும்புகிறுர்களாம் சில பெண்கள். ஒரு மானைப் பற்றி விரைந்து ஓடிய கூளப்பன், எதிரே நிற்கும் பலமான்களைப் பாராமல் அரண்மனைக்குள் சென்று விடுகிறுன்!

இங்கே, நாகேந்திரன் இப்படி வந்துவிட, அங்கே - மலர்க்காவில் - அன்னநடைப் பெண்பெருமாள், பேராளன் பெஞ்சைப் பெரிய நாகேந்திரனைக் காணுமல், மதி மறந்து மெய்சோர்ந்து விடுகிறுள்; ஆனைதனைக்காணுது, அரும்‘பிடி’ போய்ப் பார்ப்பதுபோல், (பிடி - பெண்யானை) மானனையாள் அந்த மலர் மண்டபமும் நீர்ச்சுனையும் தேடுகிறுள்; மூச்செறிகிறுள்; செங்கமலத் தாள் சிவப்ப ஓடுகிறுள்; அவன் உருவெளியைத் தெண்டனிடுகிறுள்.

(தொடரும்.)

நா. கே. நீ. செ.

சரியான விடை அனுப்பியோர்

(12-2-55 இதழ் தொடர்ச்சி)

101. அ. மெரினு, அம்பா சமுத்திரம். 102. ஆ. அருளரசு, முதுகுளத்தூர். 103. க. இரா. இராசன், பேரூர். 104. கெ. வ. சீனிவாசலு, சென்னை 7. 105. கி. பழநியப்பன், வேலூர். 106. இரா. குப்பண்ணன், வேலூர்- 107. கா. சிதுரைக்கண்ணு, சென்னை-11. 108. ரா. கோவிந்தசாமி, சென்னை-5. 109, சு. பெருமாள்சாமி, மதுரை. 110. க. குப்புசாமி, சென்னை-15. 111. கோவிந்தன், பழவேற்காடு. 112. மா. வரதராசன், சென்னை-1. 113. கி. குசை மாணிக்கம், ஒத்தையால். 114. சு. தர்மலிங்கம், தூத்துக்குடி. 115. தி. சு. சிவஞானம், கோவை. 116. ரா. சு. வெங்கடாசலம், அவிநாசி, 117. வி. என். மாணிக்கம், வீரவநல்லூர். 118. பி. கமலம், இளையான்குடி. 119, எ. பார்த்த சாரதி, திருப்பாபுலியூர். 120. வி. ஆர். தண்டபாணி, வண்டிபாளயம். 121. கு. சபாநாயகன், காட்டு மன்னார் கோவில். 122. த. இராச குரு, புதுஉண்டிப் பாளையம். 123. இரா. சுப்ரமணியன, பட்டுக்கோட்டை. 124. ஜே. வி. ஆர். சந்திரன், பட்டுக்கோட்டை. 125. பொ. இரா. கண்ணன், லால்குடி. 126. டி. தர்மலிங்கம், சென்னை-14. 127. ச. பா. பாலசுப்பிரமணியன், மதுரை. 128. க. தமிழ்த் தென்றல், மணப்பாறை. 129. மா. அறவாழி, சென்னை-1. 130. க. ஜானகிராமன், சென்னை-7. 131. கு. முத்துராமன், ஆவணிப்பூர். 132. ச. மூக்கன், திருக்குறங்குடி.

அடுத்த இதழில்

நமது மாவட்ட செயலாளர்கள் பகுதியில்தென்னுற்காடு மாவட்ட செயலாளர் தோழர் ஆர். பாலகுருசாமி அவர்களின் வாழ்க்கை வரலாறு வெளிவரும்.

நன்றி

பேரூரில் கூடிய திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழு, மறைந்த எங்கள் தந்தையாருக்கு அனுதாபம் தெரிவித்தமைக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

கண்ணப்பன்,
சீனிவாசன்,
கண்ணதாசன்.

அவன்தான் மங்கையின் காதலன்.

மங்கைக்கு ஒன்றுமே புரியவில்லை. கமலினியைக் கெடுத்தவன் தன்காதலஞ? அவளால் நம்பமுடியவில்லை. உடலெல்லாம் 'குப்'பென்று வியர்த்தது. கமலினி அவனைப்பார்த்துச் சத்தம் போட்டாளே தவிர, அதற்குப் பிறகு ஒரு வார்த்தையும் பேசவில்லை.

காலையிலே கமலினி மாறுவேடத்தில் நடத்திக்கொண்டிருந்த 'கேளபரங்களை, அவன் கவனிக்காமல், ஆற்றங்கரையில் உலவிக்கொண்டிருந்ததால், இப்பொழுது அவளைக்கண்டு அதிர்ச்சியுற்ருன். சிறிது நேரம் அந்த இடத்தில் மௌனம் குடிகொண்டது.

நந்தினியும் ஆச்சரியமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். கமலினி அந்த மௌனத்திற்கிடையில் கண்ணீரோடு தலைகுனிந்தாள். படைகள் அப்படியே நின்று கொண்டிருந்தன. திடீரென்று 'அன்னை வாழ்க!' என்ற குரல் ஓங்கி எழுந்தது. 'வாழ்க! வாழக!' என்று படையெல்லாம் குரல் கொடுத்து நடைபோட ஆரம்பித்தன. அதுவரை, வேடிக்கையாக நடந்தே செல்லலாம் என்று நடந்து வந்துகொண்டிருந்த மங்கை, கமலினி, நந்தினி மூவரும் ஒரே ரதத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டனர். கமலினியை அணைத்தவாறுதான் மங்கை ரதத்தில் ஏறினுள்.

படைகள் போகும் பொழுது சிறிது நேரம்வரை மூவரும் ஒருவருக் கொருவர் பேசாமல் இருந்தனர். அப்போது திடீரென்று மங்கைக்கு, தன் காதலன் சொன்ன கதையெல்லாம் நினைவுக்கு வந்தன. கமலினி கதை சொன்னபோது இந்த எண்ணம் அவளுக்கு வரவேயில்லை. காரணம், அவள் காதலன் அவளுக்குச் சொன்ன செய்தியில், அவன் இளமரக்காவுக்குச் சென்றதோ, யாரையும் சந்தித்ததோ, கெடுத்ததோ இல்லை. அவமானத்திற்குப் பழி வாங்கினேன் என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தான்.

மங்கைக்கு தன்காதலன் மீது ...ப்போது கோபமேற்பட்டது. அதை ...டும் நம்மிடம் மறைத்து விட்டாரே என்று ஆத்திரப்பட்டாள். அந்தப் பலி, கமலினியாகவும் இருந்திருக்கிறதே என்ற கவலையும் கொண்டாள். இந்த மௌனமே கடைசி வரை தொடர்ந்தது.

நள்ளிரவில் படைகள் குடக் கடலின் (அராபிக்கடல்) கரைக்கு வந்து சேர்ந்தன. காலையில் சாந்திமத் தீவுக்குப் புறப்படுவதற்கு ஏராளமான படகுகளை ஏற்பாடு செய்தனர் வீரர்கள். விடியும் வரை படைகள் கடற்கரை மணலிலேயே ஓய்வு கொண்டன. அந்தக் கரையிலேயே குடிசைகளில் வசித்துக் கொண்டிருந்த படகோட்டிகள் பேரத்தை முடித்துக்கொண்டு உல்லாசமாகப் பாட ஆரம்பித்தனர். அந்தக் களைப்பினிடையிலும் மங்கை, கமலினி, நந்தினி மூவரும் தூங்கவேயில்லை. மங்கைக்குக் குழப்பம். கமலினிக்குக் கவலை. நந்தினிக்கு உற்சாகம். ஆகவே, இமைக்காத விழியோடும் அந்த மூவரும் பால் நில ஒளியிலே கடற்கரை மணலைக் கிளறியபடி உட்கார்ந்திருந்தார்கள்.

சிறிது தூரத்தில் நிம்மதியின்றி உலவிக் கொண்டிருந்த மங்கையின் காதலன், மங்கையை தனியாகச் சந்தித்துப் பேச அவாவுள்ளவனுக முன்னும் பின்னும் நடந்துகொண்டிருந்தான். மங்கை அவனை நெருங்கவேயில்லை.

பொழுது விடிந்தது. படைகள் ஒரே உற்சாக வெள்ளத்தில் மிதந்தன. அந்த அதிகாலை நேரத்தில் படகோட்டிகளின் தெம்மாங்கு வானைப் பிளந்தது. படைகள் யாவும் படகிலே ஏறி அமர்ந்தன. அழகியதோர் படகில் மங்கை, கமலினி, நந்தினி மூவரும் ஏறிக்கொள்ள, எட்டு நாழிகைப் பயணத்திற்குப் பிறகு, படைகள் சாந்திமத் தீவின் கரையை நெருங்கின.

அவ்சரம் பொறுக்காத சில வீரர்கள் கடலில் குதித்து நீந்தியே கரைவந்து சேர்ந்தனர். குனிந்து தரையை முத்தமிட்டாள் மங்கை. 'அன்னை வாழ்க!' என்ற குரல் எழுந்தது. கம்பீரமாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்த சாந்திமத் தீவு வீரர்களின் கண்களில், மணமுடிந்த பெண்ணுக்கு தாய்வீடு காணப்படுவதுபோல் காணப்பட்டது.

"ஆகா! இது தீவுதானு? அல்லது ஒரு பெரிய நாட்டின கரையிலேயே வந்து இறங்கிவிட்டோமா?" என்று நந்தினி அதிசயித்தாள். காரணம், அவ்வளவு. அழகிய மாளிகைகளை அங்கே அவள் கண்டாள். எல்லோரும் அன்னைவாழும் மாளிகைக்குப் புறப்பட்டனர்.

★

11

தாளிட்ட கதவும், தாளாத துன்பமும்

> கணைஒன் றியஇரு கண்வலைக் கோஎன் கலைமுழுதும்
> பணைஒன்று தோளிதன் பார்வையில் பட்டுப் பரிசழிந்து
> துணைஇன்றி நின்று வருந்துறு வேற்கிவை சொல்லிநில்லாய்
> புணைஇன்றி யார்கடப் பாற்கடற் பாய்புனற் பொன்னியையே.
>
> —அம்பிகாபதி கோவை.

ஆலங்காட்டின்அருகிலிருந்தகுளக் கரைப் படிக்கட்டில் கண்ணயர்ந்த இடைதுறையான் காலையில் கண்விழித்தான். தாளமுடியாத பசியோடும், வேதனையோடும் நடக்க ஆரம்பித்தான். இப்போது அவனுல் சரியான தடங்காண முடிந்தது. கதிரவன் மலைவாயிலில் விழும் நேரத்தில் சோழன் தலைநகருக்கு வந்து சேர்ந்தான். தன்னை யாரும் அடையாளம் கண்டுபிடித்துக் கொள்ள முடியாதவாறு, பதுங்கிப் பதுங்கி அரிசங்கமனின் இல்லம் வந்து சேர்ந்தான். அவன் வந்து சேர்ந்தபோது அரிசங்கமன் வீட்டிலே இல்லை. புஞ்சராயர்தான் கட்டிலோடு கட்டிலாகப் படுத்திருந்தார். மரகதம் தோட்டத்திலே பூவெடுத்துக்கொண்டிருந்தாள்.

வந்த இடைதுறையான், வாசலிலே நின்றபடி 'ஐயா! ஐயா!' என்று சத்தம் கொடுத்தான். சத்தம் கேட்ட புஞ்சராயர், படுக்கையிலிருந்தவாறே மரகதத்தை அழைத்தார். தன்னை அழைப்பதை அரைகுறையாகக் கேட்ட மரகதம் பூக்கூடையை அங்கேயே வைத்துவிட்டு, துள்ளிக் குதித்து ஓடிவந்தாள்.

"யாரோ கூப்பிடுற சத்தம் கேக்குது, பாரம்மா!" என்ருர் புஞ்சராயர். மரகதம் ஓடிவந்து வாசலில் பார்க்க, வாடிவதங்கி இடைதுறையான் அங்கே நின்றுகொண்டிருந்தான்.

"யார் நீங்கள்?" என்று கேட்டாள் மரகதம்.

"அரிசங்கமனின் நண்பன், அவர் இல்லையா?"

"இல்லை! அரண்மனைக்குப் போயிருக்கிருர். இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார். அவசரமாகப் பார்க்கவேண்டுமா?"

"ஆமாம்!"

"சரி! இப்படி உட்காருங்கள். கொஞ்சநேரத்தில் வந்துவிடுவார்," என்று ஒரு ஆசனத்தைக் காட்ட அரிசங்கமன் அதில் அமர்ந்தான்.

"தண்ணீர் சாப்பிடுகிறீர்களா?" என்று பரிவோடு கேட்டாள் மரகதம். "ஏதாவது சுவைநீர் கொடுங்களேன்" என்று வெட்கத்தைவிட்டுக் கேட்டான் இடைதுறையான். "தருகிறேன்!" என்று ஓடிய மரகதம், ஒரு பாத்திரம் நிறைய சுவைநீர் கொண்டு வந்தாள். அடக்கமாட்டாத ஆத்திரத்தோடு அதை வாங்கி, 'மடமட'வென்று குடித்தான் இடைதுறையான்.

ஒரு பெருமூச்சோடும், நிம்மதியோடும் பாத்திரத்தைத் திருப்பிக் கொடுத்தான். அதற்குள் அரிசங்கமனே அங்கு வந்துவிட்டான். இடைதுறையானைக் கண்டதும் அதிர்ச்சியுற்ருன். "எப்போது வந்தீர்கள்?" என்று கேட்டான். ஓடிவந்து

கட்டிக்கொண்டான், “ நாட்டைத் திருப்பிக்கொடுத்து விட்டார்களென்று சொல்லியனுப்பியிருந்தீர்களே, என்னாயிற்று ?” என்று கேட்டான்.

நடந்ததை விளக்கமாகக் கூறினான் இடைதுறையான். அரிசங்கமன் கருவினான். “இராசேந்திரன் காரியங்கள் இனி ஒன்றும் நடக்காது ,” என்றான். தான் சோழ நாட்டு நிர்வாக அணியைப் பிளந்து வைத்திருப்பதைக் கூறினான். அரண்மனை அரசியலமைப்பைக் குழப்பி வைத்திருப்பதைக் கூறினான். ‘ காலம் பார்த்து மோதினால் காரியம் பலித்துவிடும் ’ என்றான். இடைதுறையான் நிம்மதியடைந்தான். காலம் வரும்வரை, இடைதுறையான் சந்நியாசிக் கோலத்தில் அரிசங்கமன் வீட்டிலேயே வசிப்பதென்று முடிவாயிற்று.

இந்தப் பேச்சுக்களையெல்லாம் கவனியாமல், மரகதம் தோட்டத்திற்குப் பூவெடுக்கப் போய்விட்டாள்.

இதற்கிடையில் இடைதுறை நாட்டைவிட்டுப் புறப்பட்ட இராசேந்திரன், தளநாயகன்முதலியோரும், படைகளும் ஆலங்காட்டுப் பகுதியில் வந்திறங்கி தேடிப்பார்த்தனர். அவர்கள் முன்பு கண்ட மங்கையரையோ, படைகளையோ அங்கே காணமுடியவில்லை. அந்த இடம் பாழாகக் கிடந்தது. “ எங்கே போயிருப்பார்கள் ? ” என்று கேட்டான் தளநாயகன் இராசேந்திரனை.

“நான் என்ன அவர்களுக்கு உறவினனா ? எங்கிருந்து வந்தார்களோ அங்கே போயிருப்பார்கள் ” என்று சிரித்தபடி பதிலளித்தான் இராசேந்திரன்.

மீண்டும் அவர்கள் புறப்பட்டு அதிகாலையில் தலைநகரம் வந்தடைந்தார்கள். நகரெங்கணும் ஒரே தோரணங்கள்; வரவேற்பு; வீட்டுக்கு வீடு மங்கையரும் குழவிகளும் நின்றுகொண்டு மலர் தூவினார்கள்.

தளநாயகனின் கண்கள் மேல் மாடங்களையே கவனித்து வந்தன அவன் எதிர்பார்த்த மாடத்தில், எதிர்பார்த்த மங்கையைக் காணோம். ஆச்சரியமும், திகிலும் உந்தித்தள்ள, ஊர்வலத்திலே ஊர்ந்து கொண்டிருந்தான் தளநாயகன். பகைவர்களின் ஊர்வலத்தை, பராரியாய் போன இடைதுறையான் பரிதாபமாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அரண்மனைக்கு வந்து ஊர்வலம் கலைந்தது. படைகளெல்லாம் விடை பெற்றுப் புறப்பட்டன வீடுகளுக்கு. பொன் வாணிகர் தெருவிலே வாழும் வீரர்கள் சிலர், உற்சாகமாக அந்தத் தெருவிலே ஓடி வந்தனர். அவர்கள் வீடுகளெல்லாம் உட்பக்கம் தாளிடப்பட்டிருந்தன. ஒரு வீரன் தன் வீட்டின் முன்னால் போய் நின்றான். கம்பீரமாகத் தலையைத் தூக்கி, கதவைத்தட்டி அவளது அழகை வர்ணித்து கதவு திறக்கக் கோரினான்.

இப்படியே ஒவ்வொரு வீரர்களும் அழைத்த குரல் தெருவெங்கும் கேட்டது. கடை திறந்து வந்த முல்லைப் படைகள், இடை வளைத்து வணங்கி எழுந்தன. வெற்றிப் புன்னகையும், மலர்ந்த விழிகளும் தெருவெங்கும் காணக்கிடந்தன.

அவசரம் தாங்காத ஒரு வீரன் அங்கேயே தன் மனைவியைப் பிடித்துக் கட்டி முத்தமிட்டு விட்டான். தூரத்திலிருந்து இதைக்

கண்ணா ! தனியறை உள்ளேயிருக்கிறது” என்று சத்தமிட்டான். முத்தங்கொண்ட இளமனைவி நாணம் தாங்காதுஉள்ளே ஓடினாள்.

சத்தமிட்ட வீரனது கையிலேயிருந்த அவனது குழந்தை தாளம் போட்டுச் சிரித்தது. அந்தப்பொழுது வீரர்களுக்கெல்லாம் ஆனந்தப் பொழுதாகக் கழிந்தது.

ஆனால் . . . . . . ?

தளநாயகனின் காதல் மாளிகை மட்டும் தாள் திறப்பாரின்றிக் கிடந்

தது. தட்டித் தட்டிப் பார்த்த தளநாயகன், பூட்டப் பட்டிருந்த பூட்டைக் கண்டு புத்தி பேதலித்தான். எதிர்த்து வரும் ஈட்டிக்கும் இமை கொட்டாத அந்த மாவீரன், கண்ணீர் சிந்தவே ஆரம்பித்தான். என்ன ஆயிற்றென்றும் அறியாமல் தகவல் சொல்வாரையும் காணாமல், மரகதத்தையும் சந்திக்க முடியாமல் இராசேந்திரனிடம் ஓடினான் தளநாயகன்.

செய்திகேட்டஇராசேந்திரனுக்கும் குழப்பமே அதிகரித்தது. இந்த மறைவுகளுக்கு ஒரு முடிவே கிடையாதா என்று எண்ணினான். ஆயினும் தளநாயகனைத் தட்டிக் கொடுத்து, அமைதிப்படுத்தி, ‘விரைவிலேயே கண்டு பிடிக்க வழி செய்வோம்’ என்றான். தளநாயகனும் ஓரளவுக்கு நிம்மதியுற்றவனாய் இல்லம் நோக்கிச் சென்றான்.

முதற் பாகம் முற்றிற்று.

(அடுத்த இதழில் இரண்டாம் பாகம் துவங்கும், தொடர்ந்து இரண்டு பக்கங்களாக, படங்களோடு வெளிவரும்.)



கோவைக் கோமான் உயர்திரு. பி. ஏ. இராசு (செட்டியார்) அவர்களின் அறுபதாண்டு நிறைவு விழா அண்மையில் சிறப்புற நடைபெற்றதை தமிழகம் அறியும். அவ்வணிக மேதையின் ‘ சொர்ண மாளிகை ’ விளம்பரத்தை தாங்கிவரா ஏடுகள் மிகக் குறைவு. அன்பும்-அரியபண்பும்-சாந்தமும் - வள்ளல் தன்மையும் - ஒருங்கே அமையப்பெற்ற அப்பெருந்தகையாளருக்கு நம் இதயபூர்வமான வணக்கங்களையும்-உளங்கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அடுத்தொரு மலர் ! அழகிய மலர் !

தென்றல்

பேராசிரியர் மலர் !

“ தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும் ”
“ ஆரியம்போல் உலக வழக்கழிந்தொழிந்து
சிதையா உன் சீரிளமைத்திறம் வியந்து
செயன் மறந்து வாழ்த்துதுமே”

[தமிழ் மொழிக்கும் திராவிட இனத்துக்கும் புதிய உணர்வு தந்த வீரர்களில் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் (பிள்ளை) முதன்மையானவர். எழுபது ஆண்டுகளுக்கு முன்பே இன எண்ணம் ஊட்டியவர், அன்னார் 1855 ஏப்ரலில் பிறந்து, 1897 ஏப்ரலில் மறைந்தார். வருகிற ஏப்ரல், அவரது பிறப்பிலிருந்து நூறும் ஆண்டாக நிற்கிறது. அன்று தென்றல், ஒரு மலர் வெளியிட்டு அவரை கௌரவிக்கிறது.]

★ விலை ரூபாய் ஒன்று. விற்பனையாளர்கள் பிரதி ஒன்றுக்கு 12 அணா வீதம் முன் பணம் அனுப்பி, மார்ச் 10உ க்குள் வேண்டிய பிரதிகளுக்கு பதிவுசெய்து கொள்ளவும். பிறகு குறைப்படுவதில் பயனில்லை.

★ தனி இதழ் கோருவோர் ஒரு ரூபா ஸ்டாம்பு அனுப்பவும்.

★ மலரில் பேராசிரியர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் பலரும் எழுதுகிறார்கள்.

★ மலர் ஏப்ரல் 10உ யன்று எங்கும் கிடைக்கும்.

★ மலர் முழுச் சிறப்புடனும் திகழும்.

விலை ரூ. 1 எப்ரல் 10உ

“ தென்றல் பேராசிரியர் மலர் ”

நினைவிருக்கட்டும் !

தென்றல்

சென்னை-6.



சரித்திரம் பேசுகிறது!

பொருதடக்கை வாள்எந்தி-போர் குரல் கொடுத்து-புலியெனக் களம் புகுந்து மாற்றுரை புறமுதுகிடச் செய்தான். மூண்டெழுந்த பெரும் பகையை விழிமூடித் திறக்குமுன் சாடினுன். வெற்றிமழை பொழிந் தான். அவ்வேங்கைத் தோளன் வீசிய வேல் பாய்ந்து வீழ்ந்துபட்ட வேந்தர்கள் பலர்! வெற்றி கீதம் பாடும் அவ்வீரனின் உடையில்லா வாள், இப்பொழுதுதான் ஒய்வு கண்டது! புயலுக்குப்பின் அமைதி நிலவுவதுபோல்; சூழ்ந்திருந்த போரின் புகை விலகியபின் புத் தொளி வீசிற்று. நாடு செழித்தது வீடெங்கும் மகிழ்ச்சி தவழ்ந்தது. பொன்னுசனத்தில் பொலிவுடன் வீற்றிருந்தான் மன்னன் பிரகாதி பத்யன்!

★

இந்த குளிர் சூழ்நிலையைக் காண சகிக்கவில்லை. கொதித் தனர். குழிதோண்டி புதைக்க வேண்டுமென்று கொக்கரித்தனர். சாதாரண பட்டாளத்து சிப்பாய்-பொன்னுசனத்தில் அமர்வதா? பூதேவி இதைப் பொருப்பாளா? இப்படி முணுமுணுத்தனர் பூ தேவர்கள். அந்த முணுமுணுப்பு மூட்டிய பொருமைத் தீ - வஞ்ச மாக உருவெடுத்தது. அந்த வாள் வீரனை சாய்க்க வலையொன்று கட்டப்பட்டது? அந்த வலையிலே வீழ்ந்துபோனுன் மன்னன். இப்படி சரித்திரப் பாதையிலே நிறுத்தப்ப ட்ட எச்சரிக்கைப் பலகைகள்-அபாய அறிவிப்புகள் எண்ணிலடங்கா! வரலாற்றிலே வஞ்சக ஆரியத்தால் ஏற்பட்ட ரத்தக்கறைகள்; கால புழுதியால் மறைக்கப்பட்டுவிட்டன. என்றாலும் இந்திய உபகண்டத்து சரித்திர ஏடுகளில் நின்றுவிட்டக் குறிப்புகள் சில. அப்பப்பா! பயங் கரம்! அக்காலத்து ஆரியர்கள் வஞ்ச கத்தின் எல்லைக்கோட்டையும் எட்டிவிட்டனர். சரித்திரச்சாலையில் சிந்தப்பட்ட ஒவ்வொரு இரத்தத் துளிகளிலும் ஆரியம் பேசுகிறது! சிரித்தபடியே தன் சக்தியை எதிர் கால சந்ததியினருக்கு சொல்லிக் கொண்டிருக்கிறது.

அதோ பாருங்கள் ஒரு ஆரியன்!

"சாந்தி நிலவட்டும் மன்னு" என்று கூறிக்கொண்டே பிரகாதி பத்யன் அரண்மனைக்குள் நுழை கிறன்.

"வருக மறையவரே! வருக!" இப்படி மன்னன் வழக்கம்போல வரவேற்பு கூறுகிறன்.

"ஓம் சாந்தி! ஓம் சாந்தி! அதி கார போதையும், சதிராட்டமும், சரசயரின்சல்லாப லீலைகளும் நடை பெறும் அரண்மனையில் என் காலடி படுவதே பாவம்! மனு ஓதியநா-மன்னன் புகழ் பேசவே கூடாது!" இப்படி பின்னுல் சொல்லப்போகும் ஒன்றிற்கு தூபம் போடுகிறன்.

"மறையவரே-நீங்கள் சொல்ல நினைப்பது" மன்னன் கொஞ்சம் பணிவோடு இப்படிக் கேட்டான்.

"நிலைமையை விளக்கிவிட்டு போக வந்தேன் மன்னு!"

"நிலைமையா? நாடு செழித் திருக்கிறதே! போர் வாடையும் நின்றுவிட்டதே!"

"போர் வாடை நின்றுவிட்டது, ஆனுல், அரசே! புயல் உருவாகிக் கொண்டிருந்து!"

"புயலா-என்ன சொல்லுகிறீர் கள்."

"பூதேவர்களின் நெஞ்சம் எரி மலையாகிக் கொண்டிருக்கிறது மன்னு-என்று வெடிக்குமோ அந்த எரிமலை எனக்கே தெரியாது."

"வேதியரே..."மன்னன் கண் களில் இப்பொழுது சிவப்பேறு கிறது சீற்றம் காரணமாக!

"மிரட்டாதே மன்னு! வந்திருப் பது ஒரு ஆரிய குலக்காவலன்; ஆண்டவனின் ஏகப்பிரதிநிதி; நான் நினைத்தால் உன் சிம்மா சனம் உருண்டுவிடும். நினைவிருக் கட்டும்" வந்த ஆரியனின் ஆண வம் தலைக்கேறிற்று.

கொதித்தெழுந்தான் மன்னன். அமைச்சர் முதலானேர் தடுத்திரா விட்டால் கூறு கூறுகப் பிளந்திருப் பான் அந்த ஆரியனை!

புருவத்தை நெறித்தான் ஆரி யன்,விழிகளை உருட்டிக்காட்டினுன்; 'விநாசகாலே விபரீத புத்தி, அழிந் தாய் போ' என்று வெறிகொண் டவனைப்போல கத்திவிட்டு வெளி யேறினுன். வேகமாக நடந்தான். பார்வையிலிருந்து மறைந்து போ கிறன்.

★

ஊர்கோடி. ஆற்றங்கரை, அங்கே ஒரு ஆலமரம். அத்தனை ஆரியர் களும் அங்கே திரண்டிருந்தனர். ஒருவன் உடம்பிலாவது சட்டை யில்லை. உரித்த மாங்கனிபோல், விழித்த விழிகளில் வஞ்சகம் வழிய காத்திருக்கின்றனர். சூழ்ச் சியே ஓர் உருக்கொண்டாற்போல் ஒரு ஆரியன் வருகிறன். உயர்ந் திருந்த ஒரு மண்திட்டில் ஏறி நிற் கிறன்; உற்றுப் பார்க்கும்போது, பிரகாதிபத்யன் அரண்மனைக்கு சென்று திரும்பினுனே அதே ஆரி யன். முன் ஏற்பாடுபடி அக்ர காரமே இவன் வருகைக்காக அங்கே காத்துக்கொண்டிருப்பது தெரிகிறது.

மண்மேட்டில் அந்த ஆரியன் பேசுகிறன். "மறையவர் குல மாணிக்கங்களே! கடவுளின் தூதர் களே! பூதேவர்களே! சாணக்கியர் காலத்தில் இன்பம்பொங்கிற்று,நம் வாழ்வில். வரி கிடையாது நமக்கு; நம்மவர் குற்றங்களுக்கு தண்டனை கிடையாது. அன்று மனுநீதி மன் னன் முடிக்குமேல் இருந்தது. அந் தணரின் சுட்டு-விரலசைவிற்கு மன் னன் ஆடினுன்! இவனே அந்த ணரை அவமதிக்கிறன், ஆரி யத்தை எதிர்க்கிறன்; சாணக்கியர் காலத்தில் நம் இனத்தவர்க்கு தரப்பட்ட சலுகைகள் எல்லாம் நின்றுவிட்டன. பேயன் பிரகாதி பத்யன் பிணமாக வேண்டும். பூதேவர்கள் ஆட்சி பொலிவு பெற வேண்டும்." இப்படி உரக்கக் கூவு கிறன்.

திரண்டிருந்த ஆரியர்கள் "ஆம்! ஆம்!" என்றுகத்துகின்றனர்.

★

சில நாட்களில் சூழ்ச்சி உருப் பெறுகிறது. சதி செயலாக மாறு கிறது: ஆரியத்தின் மூளை சுறு சுறுப்பாக வேலை செய்கிறது. அப்பொழுது பிரகாதிபத்யனின் சேனைத்தலைவனுக இருந்த புஷ்ய மித்திரன் ஒரு பதவிப் பித்தன்; சிப்பாயாக இருந்து அவன் சேனுதி பதியாவதற்கே இரண்டு துரோகங் களைச் செய்தவன் அவன்.

ஆரியம் அவனை மயக்கிற்று; பதவி ஆசையைத் துண்டிவிட்டது. "புஷ்யமித்ரா நீ புடம் போட்ட தங்கம்பா! புழுதியால் மறைக் கப்பட்டிருக்கிருய்; மாணிக்கம் நீ ஆனுல் குப்பையில் கிடக்கிருய்; பைத்தியக்காரா-வாழத்தெரியாத வனுகஇருக்கிருய்; வாய்ப்பிருந்தும் நழுவ விடுகிருய்-சிம்மாசனம் உனக் காகக் காத்திருக்கிறது" இப்படி யெல்லாம் உபதேசம் செய்யப்பட் டான். சபலம் அவனை ஆட்டிப் படைத்தது.

★

அக்ரகாரத்து அழகி ஒருத்தி புஷ்யமித்திரனுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டாள் ஆரியர் களால்! அவள் கண்வலையில் வீழ்ந்தான் சேனைத்தலைவன். கட மையை மறந்தான். அந்த ஆரிய மங்கையும் தன் இனம்வாழ முத

லில் தன் கற்பை பலியிட்டாள்! அவள் படைத்த முத்த விருந்தில் மதிமயங்கினுன். அவள் கட் டளையை நிறைவேற்றுவதாக உறுதியளித்தான். பதவி மோகம் வேறு, சதி செயலாக மாறுகிறது. புஷ்யமித்திரன் சூழ்ச்சியால் மன் னன் பிரகாதிபத்யன் பிணமாக்கப் படுகிறன். பூதேவர்கள் புன்னகை பூத்தனர்; ஆரியம் வாய்குளிரச் சிரித்தது,மன்னன் பிரகாதிபத்யன் ஆரியத்தைப் பகைத்துக்கொண் டான், அதனுல் அழிந்துபோனுன், என்று அவனிக்கு தன் சக்தியை எடுத்து கூறிற்று ஆரியம்!

அதன் பிறகு புஷ்யமித்திரன் பொன்னுசனத்தில் ஏற்றப்பட்டான். வேதமே அவனுக்கு சட்டம்! ஆரி யர்களே அமைச்சர்கள் - கேட்க வேண்டுமா! பிறகு ஆரிய ராஜ்யம் தான்! புஷ்யமித்திரன் ஒரு கொலுப்பொம்மையாக வீற்றிருந் தான். படிந்திருந்த பிரகாதி பத்தியனின் ரத்தக்கரையைப் பார்த்து பார்த்து சிரித்தது ஆரியம்.

இதுபோல பலப்பல சிரிப்பொலி களை இந்திய துணைக்கண்டத்து சரித்திரத்தைகூர்ந்து கவனித்தால் தெளிவாகக் கேட்கலாம்! இப்படி சில குறிப்புகளைக் காட்டி ஆரியம் இறுமாந்து பேசுகிறது! இடியென சிரிக்கிறது. ஓயாமல் சிரித்துக் கொண்டிருக்கிறது!

★

கார் காலம் வந்து விட்டது! மாலையிலே மலரும் காட்டு முல்லை எங்கும் தன் மணத்தைப் பரப்பி நின்றது. இந்தச் சூழ்நிலையில் முன்னாள் பெய்த பெருமழையின் விளைவாக காணுமிடம் எங்கணும் நீர் நிலைகளாக தேங்கி நின்றது. உள்ளத்தை முன்னால் ஓட விட்டு உருண்டோடும் தேரிலே தன் உடலை மட்டும் தாங்கி, தலைவியைக் காண கடுகி வந்து கொண்டிருக்கும் தலைவனால் இதைச் சகிக்க முடியுமா?

அவன் போர்க்களத்தில் தன் நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காகவும் வீரப்போர் புரிந்து வெற்றி மாலை சூடி விரைந்து வருகிறான்! ஆகா! அவன் நெஞ்சில் தான் எத்தனை எண்ணங்கள், கனவுகள்! சென்ற பல திங்களாக அவன் தன் உயிரினுமினிய தலைவியைப் பிரிந்து போர் முகத்தில் கருமமே கண்ணாகயிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றி யிருக்கிறான். புதியதொரு வெற்றியை தன் புரவலனுக்குத் தேடித் தந்துள்ளான். எப்பொழுதும் போர் முழக்கமும், களிறுகளின்பிளிறலும், வீரர்களின் மரண ஒலிகளும் கேட்டுக் கேட்டு அவன் செவிகள் விரக்தியுற்று கிடந்தன. வீணையைப் பழிக்கும் தன் தலைவியின் கன்னல்மொழிகளைக் கேட்டானில்லை. அவள் நடக்கும் போது குலுங்கும் கைவளையல்களின் ஒலியைக் கேட்டானில்லை. அவள் இறுகத் தழுவும் மார்பின் சுகத்தை அடைந்தானில்லை... ...அவ்வளவும் இன்னும் சற்று நேரத்தில் சந்திக்கப் போகும் இன்ப நிகழ்ச்சிகளாகும். ஆகவே தான், அவன் தேரோட்டும் பாகனை 'இன்னும் சற்று வேகமாகப்போ!' என்று நச்சரித்துக் கொண்டிருந்தான். முன்பு ஒரு முறை.

தேரின் மணியோசை தன் தேவியின் காதில் விழ ஏதுவில்லாமலிருந்தது. ஆகவே இளஞ்சிறுரனை அழைத்து தன் வருகையை உணர்த்தினான். தேரானது பாதையைச் சுற்றி வருவதற்குமுன் அந்த இளையோர் குறுக்கு வழியில் தலைவயின் இல்லத்தை யடைந்து அவன் வருகையை தலைவிக்குணர்த்தினர். கேட்டதுதான் தாமதம். அந்தக் கிள்ளைமொழியால் அதுகாறும் வாரி முடித்திராத கூந்தலின் மாசு போகுமாறு நறு நெய் தடவி கதம்பப் பொடி தேய்த்து பொய்கையில் நீராடினாள். ஈரம்போக அகிற் புகை யூட்டினாள். கந்தம் களபம் பூசினாள். நறுமண கூதலம் சேர்த்து சிக்கெடுத்து கூந்தலைச்சீவி மணம் வீசும் மலர்களை முடிக்கின்ற தருவாயில், தலைவன் இல்லம் புகுந்து விட்டான். இன்னும் அவள் புனைய வேண்டிய புனைகள் எத்தனையோ உள்ளன. காதிலே அணி பூட்ட வேண்டும். கைவளையலைச் சரி செய்து கொள்ள வேண்டும். இடையிலே பட்டுத் துகிலுடுத்தி மேகலை பூட்டி, எழிற் கண்களிலே மைதீட்டி அன்றலர்ந்த செந்தாமரையென அவள் விளங்க வேண்டாமா?

அதற்குள்ளே வந்து நுழைந்து விட்டானே தலைவன்! ஐயோ எப்படிச் சென்று அவனை வரவேற்பது...இந்த அலங்கோலநிலையிலா? இருந்தா லென்ன? யாரவர்? என்னுடையவர் தானே! இந்த எனது அரை குறை கோலத்தை அவர் எப்போதுமே கண்டதில்லையா என்ன? ஆம்! அவள் இப்படிப் பலப்பல எண்ணி யிருத்தல் வேண்டும். இல்லாவிடில் தன் மேலாடை நெகிழ்வதையும் கவனியாது, கூந்தல் அவிழ்வதையும் மறந்து ஒரே ஓட்டமாக ஓடிவந்து தலைவனை இறுகத் தழுவிக் கொள்வாளா? இந்தக் கடந்த கால காட்சி தலைவன் நெஞ்சிலே நீங்காத எழிலோவியமாய் பதிந்து விட்டது. இறந்த கால காட்சியாயினும் இன்ப நினைவல்லவா? சமயம் நேரும் போதெல்லாம் அது தோற்றமளித்துகொண்டேதானிருந்தது. ஆகவே இந்தத் தடவையும் அதுபோல் நிகழுமா என முன் கூட்டியே எண்ண மிடுகிறான் பொல்லாத தலைவன்! எண்ண மிடுவதோடு அதை பாகனிடம் வேறு கூறுகிறான் அந்த நாணம் துறந்தவன்...சே...சே... நீங்களே படியுங்கள்...

''மறத்தற் கரிதால் பாக! பன்னாள்
வறத்தொடு பொருந்திய உலகு
தொழிற் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீ ரவல
நாநவில் பல்கிளை கறங்க நாவுடை
மணியொலி கேளாள் வாணுதல்
அதனால்
ஏகுமின் என்ற இளயர் வல்லே
இல்புக் கறியுந ராக மெல்லென
மண்ணாக் கூந்த மாசறக் கழீஇச்
சில் போது கொண்டு பல்குரல்
அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருந்
துறாஅ
அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமாஅரிவைமகிழ்ந்தயர்நிலையே''

(நற்றிணை. 42-கீரத்தனார் பாடியது)

காமம் கண்ணை மறைக்கு மென்பார்கள். இங்கு தலைவனின் கருத்தையே நிலைகுலையச் செய்து விட்டது. முன்பொரு தடவை நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து இன்னும் அதுபோல் நடக்காதா என்ற நினைவுடன் பாகனிடம்விரைவில் தேரைச் செலுத்து என்று கூறி, அதற்கு காரணமும் கூறுகின்ற தலைவன் நிச்சயம் ஏமாறப் போகின்றான். ஏனெனில் அங்கு தலைவி இவனை வரவேற்க தயாராக இருக்கின்றாள்!

—வி. கலைமணி பி.ஏ. ஆனர்ஸ்.

எப்படி வரும் ஐயனே . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர சீக்கியநாடு காண போராடத் தயங்கமாட்டோம். தீவிர இயக்கம் நடத்துவோம். லட்சியம் சித்திக்கச் செய்ய, உயிரையும் தர, லட்சக் கணக்கானவர்கள் தயார், என்ற போர்முரசு பஞ்சாபிலிருந்து கேட்கிறது. அந்தப் பிரிவினை முழக்கமிடும் சீக்கியர்களின் தலைவன்தான் மாஸ்டர் தாராசிங்.

நம்மை, பிரிவினை பெறுவதால் பிற்போக்கு வாதிகள் என்று இங்குள்ள கம்யூனிஸ்டுகள் கூறுகிறார்கள். ஆனால்-

அகாலிதளம் என்ற சீக்கிய மத இயக்கம் மாஸ்டர் தாராசிங் தலைமையில் இயங்கி வருகிறது. அவர்கள் சீக்கியநாடு வேண்டும் என்று கோருகிறார்கள். சுதந்திர சீக்கிய நாடு பெறப் பாடுபடும், அகாலி தளம் என்ற இயக்கம் சென்ற ஆண்டு அங்கு நடைபெற்ற மத நிறுவன நிர்வாகத் தேர்தலில் பெருவாரியான இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றிருக்கிறது. அந்த அகாலிதளத்தவருக்கு கம்யூனிஸ்டுகள் ஆதரவு தந்திருக்கிறார்கள். ஏன்- அகாலிதள இயக்கத்திலேயே ஏராளமான கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள். அகாலிதளத்தின் கோரிக்கையை, பிரிவினை முழக்கத்தை ஏற்றுக்கொண்டு, ஒத்துக்கொண்டு, அகாலிதளத்தில் இடம் பெற்றுள்ளார்கள் கம்யூனிஸ்டுகள் அங்கு.

ஆனால் இங்கு அவர்களின் நிலை?

இதற்குக்கூட, அவர்களுக்கு வேதப் புத்தகமாயும் நமக்கு ஆராய்ச்சிக்கு மட்டுமிருக்கும் 'மார்க்சியம்' என்ன சொல்கிறதோ அவர்களுக்கு? நமக்குத் தெரியாது அது.

ஒரு காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்துடன் ஒட்டிக்கொண்டிருந்துவிட்டு இன்று தனித்துஇயங்குகிற பாகிஸ்தானில், பக்தூனிஸ்தான் வேண்டும் என்ற பிரிவினை முழக்கம். அங்கும் ஒற்றுமை கீதம் கேட்கத்தான் செய்கிறது. பர்மாவில் கரேன்களின் தனிநாடு கோரிக்கை பிரிவினை முழக்கம். அங்கும் ஒற்றுமை கீதம் இசைக்கத்தான் படுகிறது.

என்னதான் ஒற்றுமை கீதம் இசைக்கப்பட்டாலும் ஒரு நாட்டு மக்களை இன்னொரு நாட்டுமக்கள் அடக்கி ஆள்வதை வேகமாகச் சுழன்றுவரும் சரித்திரம் ஏற்றுக் கொள்ளாது.

பிரிவினை என்னும் போது, ஏதோ ஏற்கெனவே ஒற்றுமையாயிருப்பவர்களைப் பிரிப்பது என்பதல்ல.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கோர அணைப்பிலே எத்தனை நாடுகள் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, இந்தியா இன்னும் இவைபோன்ற எத்தனை ஒன்று படுத்தப்பட்டிருந்தன. இன்று அவை எப்படி, ஒவ்வொன்றாக, அந்த அணைப்பிலிருந்து பிரிந்து விட்டன. அதைப் போலத்தான் இந்தியத்துணைக் கண்டத்தில் உள்ளபல இனமக்கள், ஒரு கூட்டாட்சியில் இணைக்கப்பட்டுள்ளன. அந்த இணைப்பு, அதிகாரத்தால் இருக்கிறதே அன்றி மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அல்ல, என்ற உண்மையை உலகுக்கு அறிவிப்பதாய் அமைந்துள்ளது இப்போது சீக்கியர்கள் எழுப்புகிற போர்க்குரல், உரிமை முழக்கம்.

தங்களுக்குக் கிடைத்துள்ள அதிகாரம், அதனால் தங்களிடம் குவியும் செல்வாக்கு, புகழ் ஆகிய அத்தனை வலுவினையும் கொண்டு எத்தனை தான் இந்தியா என்றும் எல்லோரும் இந்தியர் என்ற ஒற்றுமை கீதம் இசைக்கப்பட்டாலும், சீக்கிய நாடு சீக்கியருக்கே, திராவிடநாடு திராவிடருக்கே! என்ற பிரிவினை முழக்கம் எழுந்தே தீரும். அந்த முழக்கங்கள் வெற்றி பெற்றே தீரும். ஏனெனில் 'இந்தியர்' என்ற புனைபெயரில் எத்தனையோ இனமக்கள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றுள்ள உலக சூழ்நிலையில் எந்த ஒரு இனமக்களும் இன்னொரு இனமக்களுடன் அதுவும் வாழ்வு முறையில் அடிப்படையிலேயே மகத்தான முரண்பாடு கொண்ட இனமக்களுடன் வாழமாட்டார்கள், வாழமுடியாது. ஏனெனில் அப்படி வாழ்வது அவர்களை அடிமையாக்கும், அவர்களது உரிமை பறிக்கப்படும், வாழ்வு சுவையற்றும் பலனற்றும் போகும் என்பதை உலக சரித்திரத்தில் சுதந்திரப் போராட்டங்கள் என்ற பகுதி தெளிவாகச் சொல்கிறது.

திராவிடநாடு திராவிடருக்கே என்பது அர்த்த மற்ற கூச்சல் என்று கூறி ஒற்றுமை கீதம் இசைக்கப்பட்டது, ஆவடி மாநாட்டில் - வடநாட்டுக் காங்கிரஸ்காரர்களால். நாம் அதற்குப் பதில் தருமுன்னே அவர்களுக்கு அறைகூவல் தந்திருக்கிறார் மாஸ்டர் தாராசிங் பஞ்சாபில். 'சீக்கியநாடு சீக்கியருக்கே' என்ற பிரிவினை முழக்கத்தை எழுப்பியிருக்கிறார்.

ஏகாதிபத்திய எண்ணம்கொண்ட ஒற்றுமை கீதம் வீழ்க! உரிமை வேட்கை கொண்ட பிரிவினை முழக்கம் வாழ்க! வளர்க!

—முகவை R. S. பாண்டியன்.

விற்பனைக்குத் தயார்!

★ 50 வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்களை மய்யமாகக் கொண்டது!

★ மாணவர்களின் சிறப்பான பொக்கிஷம்!

கிரேக்க மாவீரன்
அலெக்சாண்டர்

தீட்டியவர்: கௌதமன்

பக்கங்கள் 228 :: விலை ரூ. 2

வியாபாரிகளுக்கு 20-சத கழிவு. முன்பணம் அனுப்ப வேண்டும். தபால் செலவு இனாம்.

கிடைக்குமிடம்:

சிந்தனையாளர் பதிப்பகம்

68, அப்பு முதலி [illegible]

தென்றல் தரும் இலக்கியப் பரிசுகள் ரூ. 2000

முடிவு தேதி **31-5-55**

1. பெருங்கதை (நாவல்) பரிசு	ரூ. **500.**
2. நாடகப் பரிசு	ரூ. **500.**
3. காவியப் பரிசு	ரூ. **500.**
4. இலக்கியச் சுவைப் பரிசு	ரூ. **500.**

என இது வழங்கப்படும். இதில் எந்தக் கட்சி-மதச் சார்புடையவர்களும் கலந்து கொள்ளலாம். இதற்கென கட்டணம் ஏதுமில்லை.

நிபந்தனைகள்

(அ) அனுப்பும் 'விஷயம்' சொந்தக் கற்பனையென்று உறுதியளிக்க வேண்டும். தழுவலோ, மொழி பெயர்ப்போ கூடாது. இதற்குமுன் பிரசுரமாயிருக்கக் கூடாது.

(ஆ) எழுதுவதைக் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், அடித்தல், திருத்தலின்றி எழுத வேண்டும். ஒருவரே எல்லாப் போட்டிகளிலும் எத்தனை வேண்டுமானாலும் எழுதியனுப்பலாம்.

(இ) இதற்காகவரும் சிபாரிசுக் கடிதங்கள் எதுவும் ஏற்கப்பட மாட்டாது. விஷயத்தின் தலைப்பையும், பெயர், முகவரி முதலியவற்றையும் தனிக்காகிதத்தில் எழுதி, அதிலேயே வைத்து அனுப்ப வேண்டும்.

(ஈ) தபாலில்சிதைவுறாதுநல்லமுறையில்கட்டிஅனுப்புவதுடன், மேலே எந்தப் போட்டிக்கு என்பதை (உதாரணமாக) பெருங்கதைப் போட்டியாக இருந்தால் "பெருங்கதைப் போட்டிக்கு" என்று எழுதி, "ஆசிரியர், தென்றல்" சென்னை-6. என்ற முகவரிக்கு ரிஜிஸ்தர் தபால் அனுப்ப வேண்டும். நேரில் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

(உ) தேர்ந்தெடுக்கப் படாததை திரும்பப்பெற வேண்டுமானால் போதிய தபால் தலைகள் அனுப்ப வேண்டும்.

(ஊ) அனுப்பும் விஷயங்கள் **(Foolscap)** 'புல்ஸ்கேப்' அளவில் வெள்ளைத்தாளில் 200 பக்கங்களுக்குக் குறையாமலும் 250 பக்கங்களுக்கு மேற்போகமலும் எழுதியனுப்ப வேண்டும்.

(எ) பெருங்கதை (நாவல்) எழுதுவோர் இயற்கைக்கு மாறான 'அதீத' சம்பவங்களை கதைக்குக் கருவாகக் கொள்ளக்கூடாது. அதைத் தவிர, இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு வேலி இல்லை. சமுதாய சீர்திருத்தமும், முன்னேற்றக் கருத்துக்களும் அடங்கியதாக, சுவையோடு செல்லும் பெருங்கதைகள், காலத்திற்கு ஏற்றவை என்பதை மட்டும் நினைவில் கொண்டால் போதும். பெருங்கதை, சமூகம் அல்லது சரித்திரத்தைச் சார்ந்ததாக இருக்கலாம்.

(ஏ) நாடகம் நடிப்பதற்கும், படிப்பதற்கும் ஏற்றதாயிருக்க வேண்டும். மற்ற விபரம் (எ)யில், உள்ளதுதான்

(ஐ) காவியம் இலக்கணம் தப்பாது இருக்கவேண்டும். 'வசன காவியம்' அரங்கேறாது. ஒரே கதையை அடிப்படையாகக் கொண்ட காவியமாக இருக்கவேண்டும். எழுதுவோர், ஆசிரியப்பா, விருத்தப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா எதிலும் எழுதலாம்; விரவியும் வரலாம். நடையும், முறையும் புதுமையாய் அமைதல் நலம். எளிய தமிழில் இயங்க வேண்டும் (உதாரணம் எதிர்பாராத முத்தம்) மற்ற விபரம் (எ)யில் உள்ளது தான்.

(ஒ) இலக்கியச் சுவை எழுதுவோர் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலிங்கத்துப் பரணி, அம்பிகாபதிக் கோவை, தஞ்சை வாணன் கோவை, புறநானூறு, அகநானூறு, நைடதம், தனிப்பாடல் திரட்டு, மூவருலா, முத்தொள்ளாயிரம், நற்றிணை, கலித்தொகை, பெருங்கதை, சூளாமணி, நீலகேசி முதலிய இலக்கியங்களில் உள்ள காவியச் சுவைகளில் சிலவற்றை எடுத்துக்கொண்டு, (அல்லது, முடியுமானால் முழுவதையும் வைத்துக் கொண்டு) ரசனை தரும் வகையில்-பாமரர்க்கும் புரியும் வகையில் எழுதக் கோருகிறோம். ஏதாவது ஒரே இலக்கியத்தின் முழுச் சுவையையும் எழுதலாம். இதில் மேற்கண்ட இலக்கியங்களின் சுவையோடு, கம்பராமாயண வரிகளை எடுத்துக்காட்டி, கம்பனிலும் உயர்ந்தவை மேற்கண்ட இலக்கியங்கள் என்று ஆதாரத்தோடு ஒப்பு நோக்கி முடிவுகட்டும் 'விஷயம்' நல்ல மதிப்பைப் பெறும்.

(1) முதற் பரிசு ரூ. 300. இரண்டாவது பரிசு ரூ. 200. என பரிசுகள் வழங்கப்பெறும்.

(2) பரிசு பெற்ற இலக்கியங்களின் முழு உரிமையும் - ஐந்து ஆண்டுகளுக்கு - 'தென்றல்' பதிப்பகத்தைச் சேரும் பிறகு ஆசிரியர்களின் உரிமையாகி விடும்.

(3) பரிசுபெற்ற இலக்கியங்களை தெலுங்கில் மொழி பெயர்த்து 'தென்றல்' வெளியிடும். அதற்கென, அதன் ஆசிரியர்களுக்கு பத்து பெர்சன்ட் 'ராயல்டி' தரப்படும்.

(4) கேரள மொழியில் வெளியிட்டாலும் அவ்வாறே!

(5) ஒவ்வொரு இலக்கியத்தையும் தேர்ந்தெடுப்பதற்கு ஐந்து நீதிபதிகள் வீதம் நியமிக்கப் படுவர்.

(6) அனைத்திலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

(7) பரிசு பெறத் தகுதியின்றி, பிரசுரத் தகுதியுடையவற்றை 'தென்றல்' வெளியிட்டு, ஆசிரியர்களுக்கு 'ராயல்டி' வழங்கும்.

(8) பரிசளிப்பு விழா சென்னையில் நடைபெறும். பரிசு பெற்றோர் வந்து செல்லும் செலவை 'தென்றல்' ஏற்றுக் கொள்ளும்.

(9) ஏதாவது இரண்டு இலக்கியங்களில் ஒருவரே முதற் பரிசு பெற்றால், அவருக்கு 'தென்றல்' மற்றும் ஒரு பெரும் பரிசு வழங்கும்.

போட்டி நிர்வாகி:
'தென்றல்', சென்னை-6.

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி *4*

ஈற்றடி: "பகுத்தறிவால் ஆராய்ந்து பார்"

குறிப்பு: நேரிசை வெண்பாக்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு தேதி 5-3-55

நீதிபதி 'சகி' தென்றல் : : சென்னை-6.

'தென்றல்'லில் உபயோகப்படுத்தப்படும் எழுத்துக்கள் அனைத்தையும், தயார் செய்தவர்கள்

நார்ட்டன் & கம்பெனி

சூளை : : சென்னை

பல்லாண்டு காலமாக பிரசித்திபெற்ற நார்ட்டன் கம்பெனியார் இப்போது புதிய பல எழுத்துக்களைத் தயார் செய்கின்றனர்.



ஜெனரல் ஆஸ்பத்திரிபற்றி . . .

வி. தோடிமுத்து, எழும்பூர்.

“ஜெனரல் ஆஸ்பத்திரி” பற்றி நீர் எழுதியுள்ள தலையங்கம் உண்மையின் படப்பிடிப்பாயினும் இவ்வளவு ‘சூடாக’ இருந்திருக்க வேண்டாம். சில நல்ல-இரக்கம் மிகுந்த - டாக்டர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள்......

உண்மை; இரக்கம் மிகுந்தோர் இருக்கத்தான் இருக்கிறார்கள். அதையே நான் ‘சிலரைத்தவிர’ என்று குறிப்பிட்டுள்ளேன். நான் குறிப்பிட்டது முற்றிலும் சென்ட்ரலில் உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரி பற்றியே தவிர, அதன் கிளைகளை அல்ல. அவற்றில் பலவற்றை நான்போய்ப்பார்த்ததில்லை. ஆனால் சென்ட்ரல் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு சில தடவைகள் சென்றிருக்கிறேன். ஒரு முறை கூட நல்ல இதயங்களை நான் காணமுடியவில்லை. அவர்கள் ஒருவேளை மும்முரமாகக் கடமையைச் செய்து கொண்டிருந்திருக்கலாம்! தனிப்பட்ட விரோதமில்லாத ஒரு விவகாரத்தை ஆராயும்போது சூடாக வார்த்தைகள் வந்து விழுகின்றன என்றால், அதில் அவ்வளவு அனுபவித்திருக்கிறோமென்று பொருள். சென்ட்ரல் ஆஸ்பத்திரிக்குள் நுழைவதென்றால், வாசலிலே நிற்கிறகாவல்காரனை ‘கவனி’க்காமல் உள்ளே புகமுடிவதில்லை. உள்ளேபோனால், மன நிம்மதியோடு திரும்பமுடிவதில்லை. இப்படி ஒரு ஆஸ்பத்திரி இருக்கலாமா? ஏழைகள் நிறைந்த ஒரு சமுதாயம் இதைத் தாங்க முடியுமா?

சில நல்ல ஆஸ்பத்திரிகளும், கருணை நிறைந்த டாக்டர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதும் உண்மை. அவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள் என்பதும் உண்மைதான்! உதாரணமாக எழும்பூர் கண் ஆஸ்பத்திரிக்கு ஒருநாள் மாலை ஏழு மணிக்கு நண்பர் கருணாநிதியைப் பார்க்கச் சென்றபோது, கீழே உள்ள ஒரு சிப்பந்தி அன்போடு எங்களை அழைத்துக் கொண்டுபோய், அவரைப் பார்த்துத் திரும்ப வசதியளித்தார். இதுபோன்ற காட்சியை ஆஸ்பத்திரியிலே காணும்போது மனது முழுத்திருப்தியும் பெறுகிறது. ஒரு முறை திருவல்லிக்கேணியில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றிற்குச்சென்றேன். அங்கு கர்ப்பிணிகளின் ‘க்யூ’ வரிசையைக்கண்டேன். மருந்து வாங்க அந்தப் பரமதரித்திரர்கள் நின்று கொண்டிருந்தனர். கடும் வெயில் - நிற்பவர்கள் கர்ப்பிணிகள். இந்தப் பரிதாபம் தாங்காத சில சிப்பந்திகள் அவர்களுக்குத்தங்களாலான உதவிகளைச் செய்து கொண்டிருந்தனர். இதில் நாம் சிப்பந்திகளிடம் திருப்தி கொண்டாலும், நிழல் தர முடியாத அரசாங்கத்தின் போக்கில் ஆத்திரம் கொள்ள நேரிடுகிறது. சுருக்கமாக, அரசாங்கத்தின் கவனக் குறைவும், ‘சில’ இரக்கமற்ற வைத்தியர்களின் மனப்போக்கும் நமது வைத்தியப் பகுதியை மோசமாக்கி வைத்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது அதைத்தான் நான் ‘சூடாக’க் குறிப்பிட்டுள்ளேன். பொல்லாதவர்களைச் சாடும்போது நல்லவர்கள் வருந்தக்கூடாது என்பதை நான் அறிவேன்; அதனாலேயே எச்சரிக்கையாக, ‘சிலரைத் தவிர’ என்று குறிப்பிட்டுள்ளேன். நல்லவர்கள் யாவரும் அந்த வரிசையில் சேர்ந்து கொள்ளமுடியும் - ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ளநல்லவர்கள் கூட!

ஏழ்மையில் வாழ்ந்து பழகியவர்கள், ஏழ்மை, வைத்திய வசதியும் கவனிப்புமின்றித் துன்புறும்போது தாங்க முடிவதில்லை. அரசாங்கத்தோடு, அதற்கு, டாக்டர்களும் நர்ஸுகளும் காரணமாகும் போது அந்த வேதனை அளவு கடந்து போகிறது. நான் அனுபவத்தில் கண்ட அந்த வேதனை தான் சூடான தலையங்கத்திற்குக் காரணமாயிற்று. இரக்கம் மிகுந்தவர்கள் என்று ஏழை மக்களால் கருதப்படுகிற எந்த வைத்தியரையும் அந்தத் தலையங்கம் சாடவில்லை.

திருச்சி அரசாங்க ஆஸ்பத்திரியில் ஒரு D. M. O. இருக்கிறார். மலையாளத்தாரான அவர், திருச்சி மாவட்ட மக்கள் அனைவராலும் நன்கு மதிக்கப்படுகிறார். காரணம் நோயாளிகளிடம் அவர்காட்டும் பரிவும் இரக்கமுமேயாகும். சிறையும் அவர் பார்வையிலேயே இருக்கிறது. எல்லாக் கைதிகளும் அவரிடம் அன்பு செலுத்துகின்றனர். அவ்வளவு இரக்கம் மிகுந்தவராக அவர் இருக்கிறார். இது போல் அனைவரும் இருந்தால், பெரும்பாலும் நோயாளிகளையே அதிகமாகக் கொண்ட ஒரு சமுதாயம் எவ்வளவு திருப்தியும் நிம்மதியும் பெற முடியும்!

◉

ச. ரஹீத், கீரனூர்.

“போற்றுபவர் போற்றட்டும்” எனும் நும் கவிதையில், “ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் என்றால் எடுத்துரைப்பேன், எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்!” என்றுள்ளீரே, உமது உள்ளம் ஏற்ற கருத்து தவறானதாயினும் அதையே வலியுறுத்துவீரா? “ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் ஏற்றால்” என்று ஏன் இருக்கக்கூடாது!

என் மனதுக்குச் சரி என்று பட்டதை எடுத்துரைப்பேன் என்பது தான் அதன் பொருள். அது தவறென்று மற்றவர்கள் முடிவு கட்டுவதைப் பற்றி நான் ஏன் கவலைப் படவேண்டும்! நீர் கொடுத்திருக்கிற திருத்தத்தின் பொருள் எனது கவிதையிலும் கிடைக்கும்.

◉

வீ. அரவேந்தன், திண்டுக்கல்.

இலக்கணமின்றி கவிதைகள் இயற்றுகிறேன் நான். அது தவறு? இலக்கணமுள்ள கவிதைகள் எவ்வாறு இயற்றுவது?

இலக்கணமில்லாத வரிகளைக் கவிதைகள் என்று கூற முடிவதில்லை. வசன நடைக்கும் அதற்கும் வேறுபாடில்லை. தமிழிலே பல தரப்பட்ட கவிதைகளுக்கு இலக்கணம்உண்டு. புதிதாக ஒரு ஓசை நயத்துடன் நாமே கூட இலக்கணம் வகுத்துக் கொள்ளலாம். இதுபோல் புரட்சிக் கவிஞரும், பாரதியும் கூட தனி வழி வகுத்துக் கொண்டுள்ளனர். ஆகவே ஓசை ஒழுங்குடன் கூடிய எந்தக் கவிதையும் இலக்கணவரம்பிற்குட் பட்டதாகக் கருதப் படலாம் பழைய இலக்கணமே இலக்கணம் என்கிற விதியை விடாப்பிடியாகப் பிடிக்க வேண்டிய அவசியமில்லை.

◉

வழக்கறிஞனின் வாதப் பொய்க்கும், கவிஞன்மிகையான கற்பனை பொய்க்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

வழக்கறிஞனின் வாதப் பொய், நிரபராதியைக் குற்றவாளியாகவும் குற்றவாளியை நிரபராதியாகவும் ஆக்கி, கண்காணும் வாழ்வில் அநீதியை விளைவித்து விடுகிறது. கவிஞனின் மிகைப் பாட்டுப்பொய், யாருக்கும் அபாய மற்ற சுவையாகி விடுகிறது.

◉

கே. பாரதமணி, திருச்செங்கோடு.

தென்னாட்டைப்பற்றிய முழு ஆராய்ச்சியும் இல்லாவிட்டாலும், சுருக்கமாகக் கூறக்கூடிய நூல் தமிழில் உண்டா?

பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார் எழுதிய “தென்னாடு” என்ற நூல் பேருதவி புரியும். மலர் நிலையம், பிராட்வே; சென்னை-1. என்ற முகவரிக்கு எழுதிக் கேளுங்கள்.

◉

வீ. அருணாசலம், புதுக்கோட்டை.

சிலப்பதிகாரத்தில் கூறப்படும் “நாளங்காடி”யின் பொருள் என்ன?

‘நாளங்காடி’ என்பது பகல் கடைத்தெரு; ‘அல்லங்காடி’ என்பது இரவுக்கடைத் தெரு.

நூல்நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்திலேந்திக் குடியன்காணும்
மாறாத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

—கண்ணதாசன்

மாயவிளக்கு

தமிழகத்தில் குழந்தைகளுக்கென புத்தகங்கள் வெளி வருவதில்லை. ஒன்றிரண்டு வந்தாலும் அவைகள் அரும்பு நெஞ்சங்கள் படித்து சுவைப்பதற்கு ஏற்றதாய் அமைவதில்லை. ஆனால், மேலை நாடுகளில் இளைஞர்கள் படித்து இன்புறுவதற்கென்றே பல பல புத்தகங்கள் எழுதி வெளியிடப் படுகின்றன. குழந்தைகள் புரிந்து கொள்ளக்கூடிய எளிய-நடையில்- அந்த இள நெஞ்சங்கள் கெடாத முறையில், பதிப்பகங்கள் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு புத்தகம் எழுதி, இளைஞர் உலகிற்கு களிப்பூட்டி வருகின்றனர். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இம்முறை இல்லையென்றே கருதலாம். காரணம், பதிப்பகத்தார், குழந்தைகளுக்கென வெளியிடப்படும் புத்தகங்கள் விலையாகாமல் போகுமோ என்று அஞ்சுகின்றனர்.

இந்த நேரத்தில் ‘மாயவிளக்கு’ ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. செட்டு செட்டாக வார்த்தைகளை அடுக்கி, வரிக்கு வரி அழகும் சுவையும் கூட்டி, இளஞ்சிட்டுக்கள் படித்துப் படித்து மகிழும் வண்ணம், உலகப்பிரசித்தமான ‘அலாவுதீனும் அற்புத தீபமும்’ என்ற கதையை எழுதியுள்ளார், திரு வை. கோவிந்தன் அவர்கள். குழந்தைகளை உட்காரவைத்து பெரியவர்கள் கதை சொல்கின்ற முறையில் கதை சுவையாக ஓடுகிறது. திரு. வை. கோ. அவர்கள் ‘மங்களம்’ என்ற புனைப்பெயரில் ‘அணில்’ குழந்தை பத்திரிகையில் 1948-ல் தொடர்ந்து எழுதியது இப்பொழுது அழகான முறையில் வெளியிடப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கு ஒரு நல்விருந்து! விலை ரூபாய் மூன்று. வெளியிட்டோர் சக்தி காரியாலயம், சென்னை.

கிரேக்க மாவீரன் அலெக்சாண்டர்

உலக வரலாற்றில் மாவீரர்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுபவர்களில் கிரேக்க நாட்டு வீரன் அலெக்சாண்டர் ஒருவன். இவன் உலகத்தை ஒரு குடையின்கீழ், அதுவும் தன் குடையின்கீழ் ஆள வேண்டுமென்று எண்ணினான். போராடினான். அதற்காக அவன் ஈடு கொடுத்த எதிர்ப்புகள், சாடிய பகைகள்வரலாற்றுஏடுகளிலே பரக்கக் காணலாம். ஆனால், பொதுவாக இவன் பிறந்து வாழ்ந்த 33 ஆண்டுகளில், இவன் பாராட்டக் கூடிய கீர்த்திமிக்க செயல் எதையும் செய்யக்காணோம். ‘அலெக்சாண்டர் தி கிரேட்’ என்ற பெயர் இவனுக்கு பொருந்துமா என்று கூட சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. என்றாலும், இளமையின் துடிப்பில் - எழுந்த நாட்டாசை காரணமாய்-வீரர் பலரை துணை சேர்த்து கீழ் நாடுகளின்மேல் பார்வை செலுத்தினான். புருஷோத்தமனுக்கும் இவனுக்கும் நடந்த போரில் - அலெக்சாண்டர் காட்டிய பெருந்தன்மைக்கு நாம் மரியாதை செலுத்தவேண்டியிருக்கிறது. இத்தகைய ஒரு வரலாற்று வீரனின் வாழ்க்கையோடு பின்னப்பட்ட சம்பவங்களை சுமார் 50 சரித ஏடுகளின் துணைகொண்டு எழுதியுள்ளார் தோழர் ‘கௌதமன்’. சரித நூல்கள் குறைவாக வெளிவரும் இந்நாளில் இது ஒரு நல்ல முயற்சி. விலை ரூ. இரண்டு. வெளியிட்டோர் சிந்தனையாளர் பதிப்பகம், 30, அப்பு முதலித் தெரு, சென்னை 4.

வெண்பாப் போட்டி

3. கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

வெண்பாப் போட்டி 3-ன், பரிசு பெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ அந்தி வரைஇரந்தேன் : அன்பே, பிடியரிசி
தந்தார் ; உணவு சமைத்திடுவாய்-இன்றேனும்
உண்டிடட்டும் நம்சேய்கள் ; ஓடிப்போய்க் காய்சருகைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—ம. இலனியன், பாளையங்கோட்டை.

★

வேதம், புராணம், விளங்கா உபநிடதம்,
சோதா இதிகாசத் தொல்லைகள்,-ஏதெனினும்,
பண்டுதொட்டு நம்வாழ்வைப் பாழ்படுத்தும் குப்பையெல்லாங்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—செந்தி, மதுரை.

★

செத்தக் குரலெடுக்கும் சீவனற்ற செய்யுளையும்
சத்தற்ற பாடலையும் சாகடிக்க--தித்திக்கும்
பண்டைத் தமிழ்பாடும் பாரதி தாசர்முன்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—நாவரசன், நன்னியூர்.

★

வண்டமிழில் நற்சிலம்பும் வள்ளுவரும் மேகலையும்
பண்டிருக்கப் பொய்மைப் புராணமேன் ?--ஒண்டொடியே !
அண்டிப் பிழைக்கவந்த ஆரியச் சாத்திரத்தைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—வெ. சாந்தபாபா, ஆயக்குடி.

★

உள்ள மிரண்டு உறவாடி முத்தமிட்டுப்
பிள்ளைக் கனியமுது பெற்றுமகிழ்--இல்லறத்தைக்
கண்டிக்கும் ஏடுகளைக் காதலியே வெந்தணலில்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—அழ. சிதம்பரம், சென்னை.

★

சாதிவழி யோம்பும் சதுர்மறையும் மேதினியில்
வேதியர்கள் வாழ விதைத்தமனு--நீதியைப்போல்
பண்டுமுதல் தென்னகத்தைப் பாழாக்கும் ஏடுகளைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—கு. இரமாதேவி, சென்னை-1.

★

பொதுவாக மக்கள் புலம்கெடுக்கும் நூல்தான்
எதுவாய் இருந்தாலும் இன்றே--கதுமெனவே
அண்டத்தை முட்ட அழலெழும்பச் செந்தமிழா !
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—வித்துவான் வெங்கடேசன், நெல்லிக்குப்பம்.

★

ஒன்றே குலமும் ஒருவனே தேவனுமென்
றன்றிங் குரைத்த வறிவுரையை--என்றென்றுந்
துண்டாடு மேடுகளைத் தூமொழியே நீயெரியிற்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—சி. இராமசாமி, சேலம்

★

வாய்மை யதான வளஞ்சேர் தமிழையே
தாய்மை யதாச்செய் சமணராம்--தூயவரை
மண்ணில் மடிந்திட மாசிழைத்த வாரியத்தை
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—அ. பொன்மணி, அம்பாசமுத்திரம்.

★

குப்பையெலாம் கூட்டிக் கொளுத்திக் குறைதீர்த்துச்
செப்பனிடும் சீர்சால் செயல்போல--ஒப்பனையில்
திண்டோள் திராவிடா ! தீயதினத் தந்தியை நீ
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—வா. ந. அழகானந்தம், லால்குடி.

★

கொடியவரை மக்கள் கொடும்பாவி என்று
கொடுநெருப்பி லிட்டுக் குளிர்வதுபோல்--கேடுதனை
உண்டுவந்து தீதுதர உண்டான அத்தனையுங்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

★

தெய்வம் பலபேசி சீர்குலையும் மாந்தரெலாம்
மெய்க்கடவுள் யாதென்று மெய்யுணரார்--மொய்குழலாய்
கண்டக் கடவுளினைக் காட்டுகின்ற ஏடுகளைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—வெண்ணெய் வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

★

நாதியற்ற சாதிகளை நாட்டிலுள்ள மக்களுக்குப்
போதிக்கும் நூல்களைப் போய்த்தேடி--மேதினியில்
தொண்டுசெய்யும் பெண்ணினத்தைத் தூற்றுகின்ற நூல்களையும்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—சு. இராமசாமி, மதுரை.

★

கற்புநெறி என்றிட்டால் காளைக்கும் உண்டலவோ
பொற்கொடிக்கே உற்றதெனப் பொறிப்பிட்டால்--பொற்றொடியே
வண்டமிழர் நாட்டினின்று வாரிநீ அப்பொறிப்பைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—சித. நாச்சியப்பன், காரைக்குடி.

★

முல்லைவளர் நாட்டிடையே முட்புதர்கள் மொய்த்ததுபோல்
நல்லதமிழ் நூல்களிடை நம்வாழ்வைக்--கொல்லுகிற
மண்டுமிருள் நூல்களுண்டு மக்களிடை அன்னவற்றைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—மி. முருகுமொழி, மயிலாப்பூர்.

★

சாதிக் கொருநீதி சாற்றிப் பலசமயம்
பேதிக்க வந்த பிழைநூல்கள்--நீதியிலாக்
குண்டர்கள் செய்தபெருங் குப்பைகளே நற்றமிழா !
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—பு. செண்பகவல்லி, சென்னை-14.

★

நற்குறளும் நாலடியும் நாற்பதுநா னூறுதொகை
வெற்பெனவைங் காப்பியமும் வீங்குளவால்--நற்றமிழர்
பண்பிலிழி கம்பனவன் பாடியரா மாயணமேன்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து

—பாவலர் ஆ. அரங்கசாமி, கோட்டை.

◉ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

தென்றல் திரை

படித்தீர்களா?

பிரமிக்கத் தக்க படங்கள்!
சுவையான பல பகுதிகள்!
கருத்தையள்ளும் கட்டுரைகள்!

விலை அணா 4

ஆண்டு சந்தா ரூ. 3

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 28, Muthu Mudali St., Madras-14.